விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலியாண் மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 01 சனிக்கிழமை (14.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 86

## கொரோனா தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் 64 பேர்

### 17 மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதி

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளனதாக சந்தேகிக்கப்படும் 64 பேர் நாட்டில் பல பகுதிகளில் ஒதுக்கப்பட்டுள்ள 17 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றி 23

எரிபொருளுக்கோ, உணவுக்கோ

## நாட்டில் எவ்விதமான தட்டுப்பாடும் இல்லை

### பதற்றம் வேண்டாம்; அரசு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் எரிபொருளுக்கோ அல்லது உணவுக்கோ எவ்வித பற்றாக்குறையும் 23

பொலிஸ், இராணுவ பாதுகாப்புடன்

## கொரோனா பரிசோதனை முகாம் வடக்கில் உருவானது

### 265 விமான பயணிகள் தடுத்து வைப்பு




*(வவுனியா)*

வவுனியா பம்பைபடு பெண்கள் இராணுவ முகாமில் கொரோனா வைரஸை பரிசோதனை செய்ய் தடுப்பு முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விமானப் பயணங்களை மேற்கொண்ட 265 பயணிகள் நேற்று இரவு 7 மணியளவில் வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

*(23ஆம் பக்கம் பார்க்க)*

நாடு முழுவதும்

## முன்பள்ளிகளை மூட அரசு உத்தரவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து முன்பள்ளிகளையும் மறு அறிவித்தல் வரை மூடுமாறு பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் பொதுமக்களிடம் அச்சநிலை காணப்படுவதால் பாடசாலை முதலாம் தவணை விடுமுறை முன்னதாகவே விடப்பட்டுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழகங்களும் வரும் 2 வாரங்களுக்கு மூடப்பட்டுள் 23

**தரம் 5**

**மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்**

கொரோனா வைரஸ் தொற்று

## சந்தேகத்தில் ஒருவர் யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு குறித்த நபர் 23

## இலங்கையில் மேலும் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று

### நோயாளர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 3 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களில் 44 வயதுடைய நபர் ஒருவர் 23

பொலிஸார் சித்திரவதை செய்ததாக

## குற்றஞ்சாட்டப்பட்டவர் போதனாவிலிருந்து தப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையத்தில் தடுப்பில் வைத்து சித்திரவதைக்குட் படுத்தப்பட்டார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்த சந்தேகநபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் 23

வேலணை பிரதேச சபை

## ஊழியர் ஒருவர் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபை ஊழியர் ஒருவர் அல்லைப் 23

## முதியவரை தாக்கிவிட்டு தங்க நகை அபகரிப்பு

### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

முதியவரைத் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம் 23

இலங்கையர்கள்

## வெளிநாடு செல்லத்தடை

(கொழும்பு)

மறு அறிவித்தல் வரும் வரை இலங்கையர்கள் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு செல்வதற்கு இடைக்கால 23

## கட்டுநாயக்கவில் அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்

### இருவர் உயிரிழப்பு; இருவர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

சவுதி அரேபியாவிலிருந்து இந்தோனேஷியாவுக்குச் சென்ற பயணிகள் விமானம் இலங்கையில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

குறித்த விமானத்தில் வந்தவர்களில் இருவர் உடல்நலக்குறைவால் அவதிப்பட்ட நிலையில் கட்டுநாயக்க சர்வதேச 23

கொரோனா வைரஸ் தொற்று

## இந்தியாவில் உயிரிழப்பு இரண்டாக அதிகரிப்பு

(டில்லி)

டில்லியில் 69 வயது மூதாட்டி ஒருவர் கொரோனா தாக்குதலுக்கு நேற்று உயிரிழந்தார்.

இதையடுத்து, கொரோனா வைரஸ் 23

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

**வலம்புரி**
**விளம்பரத் தொடர்புகளுக்கு**
**021 221 7603**
**021 567 1532**

## தேவை

முல்லைத்தீவுப் பகுதியில் தோட்டமொன்றில் காவலுக்கு ஆள் தேவை தோட்டங்களில் தனியாளாக வேலை செய்து பழக்கம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் காவலுக்கு மட்டும் மாதத்துக்கு ரூபா 12000 மேலதிக வேலைகளுக்கு வேலைக் கேற்ற சம்பளம் வழங்கப்படும். குடும்பமாகத் தங்குவதற்கான வசதி உண்டு. தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சிக்கடிதம், மேலதிக சிபாரிசுகள் தேவை.

தொலைபேசி : **077 168 1697/ 077 113 3667** (C-9481)

## மணமகன் தேவை

UK யில் பிரஜாவுரிமையுடைய உடற்கூற்று பரிசோதகராக தொழில்புரியும் 30 வயதுடைய விசாக நட்சத்திர இந்து மணமகளுக்கு பெற்றோர்கள் உள்நாட்டிலோ UK யிலோ பொருத்தமான வரனைத் தேடுகின்றனர்.

(2587) தொடர்புகளுக்கு : **076 196 6047**

### கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து), மூளாய் பணியாளர் வெற்றிடம்

**எமது வைத்தியசாலைக்கு பணியாளர் வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.**

1. ஆய்வுகூட உதவியாளர்
2. வேலை மேற்பார்வையாளர் (Overseer)
3. முதியோர் இல்ல பராமரிப்பாளர் (ஆண்/பெண்)
4. தாதி பயிலுனராக சேர விரும்புவோர்

ஆர்வமுள்ளவர்கள் தகுதிச் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 15.03.2020 அன்று காலை 9.00 மணிக்கு வைத்திய சாலைக்கு சமுகம் தரவும்.

**தலைவர்**
**கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து), மூளாய்.**
**தொலைபேசி இல : 021 225 0441 (9.00 A.M - 4.30 P.M)** (C-9487)

# மரண அறிவித்தல்



## திருமதி செல்வமலர் வெற்றிவேலாயுதம்

யாழ் தொல்புரத்தினை பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும், 27, நெல்சன் பிலேஸ் ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமலர் வெற்றிவேலாயுதம் அவர்கள் நேற்று முன்தினம் (12.03.2020) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் சுந்தரமூர்த்தி வெற்றிவேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்பாத்துரை - ஈஸ்வரி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி - தையல்நாயகி தம்பதிகளின் மருமகளும், செல்வகௌரி, விஜயகுமார் (பிரித்தானியா), செல்வபவன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயகுமார் தணிகாசலம், கலைவாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்வராஜன், மழவராயன், இன்பமலர் மாணிக்கவடிவேல் மற்றும் திவ்வியரஞ்சினி கிருஸ்ணகுமார் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற தணிகாசலம், புவனேஸ்வரி தணிகாசலம் (கனடா), வைரவநாதன் புவனேஸ்வரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சம்பந்தியும், சயதேவி செல்வராஜன் (டென்மார்க்), வசந்தி மழவராஜன் (இலங்கை), செல்லத்துரை மாணிக்கவடிவேல், நடுநாயகம் கிருஸ்ணகுமார் (ஹொலண்ட்), அம்பிகாதேவி பரமநாதன் (யாழ்ப்பாணம்), சயதேவி செல்வராஜன் (டென்மார்க்), கலாதேவி பொன்னம்பலம் (யாழ்ப்பாணம்), சகுந்தலாதேவி சத்யபாலன் (யாழ்ப்பாணம்), லோகபாலினி சிறிரங்கநாதன் (பிரித்தானியா) ஆகியோரின் மைத்துனியும், வீணா, விதுலா, விதுசா, அருகன் ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.03.2020) ஞாயிற்றுக்கிழமை 27, நெல்சன் பிலேஸ், வெள்ளவத்தையில் உள்ள அன்னாரின் வீட்டில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி தகனக்கிரியை கல்கிசை மயானத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை. (2599)

தகவல் சு.வெற்றிவேலாயுதம் (கணவன்)
தொடர்பு : 011 236 1354 / 076 488 1731



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர்
## கருணசேகரம் மகேஸ்வரி

**பிறப்பு – 16.11.1944 இறப்பு – 14.02.2020**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துவிட்டு வான் உறையும் தெய்வத்திடம் சென்றுவிட்ட எங்கள் குலதெய்வம் கருணசேகரம் மகேஸ்வரித் தாயின் பிரிவுச்செய்தி அறிந்து அனைத்து வழிகளிலும் ஆறுதல் கூறியோருக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்தோரிற்கும் இருகரம் பற்றி நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (15.03.2020) ஞாயிற்றுக்கிழமை எமது அம்மன் கோவிலடி, வல்வட்டித்துறை இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்வதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல் : அன்பு மகன்கள், உறவினர்கள். 077 753 1466
அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை. (2524) 077 400 3421

# கொன்று குவிக்கும் கொரோனா

## உலகளாவிய ரீதியில் 4600 பேர் உயிரிழப்பு

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் சீனாவில் 3169 பேரும் இத்தாலியில் 1016 பேரும் ஈரானில் 429 பேரும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை ஒரு இலட்சத்து 26 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தகவல் வெளியிட்டது.






| நாடு | பலி | பாதிப்பு |
|---|---|---|
| சீனா | 3169 | 80,793 |
| இத்தாலி | 1016 | 15,113 |
| ஈரான் | 429 | 10,000 |
| உலகளாவிய ரீதியில் | 4600 (அதிகம்) | 126,000 (அதிகம்) |

## கொரோனா அச்சம்; மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு சென்றமைக்கு கடும் எதிர்ப்பு

### பதற்றத்தையடுத்து 6பேர் கைது; அதிரடிப்படை குவிப்பு





(ஏறவூர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு களுவாஞ்சிக்குடியில் இருந்து நோயாளியொருவரை கொண்டு செல்வதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாக பதற்ற நிலையேற்பட்டது.

நேற்றுக் காலை களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த 47 வயதுடைய ஒருவர் கடும் காய்ச்சல் உட்பட கொரோனாவுக்கான சில நோய் அறிகுறிகள் காணப்பட்டதன் காரணமாக மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

கொழும்பிலுள்ள ஹோட்டல் ஒன்றில் கடமையாற்றி விடுமுறையில் போரதீவுப்பற்று திக்கோடைக்குச் சென்ற நிலையில் அங்கு காய்ச்சலுக்குட்பட்டதன் காரணமாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறச்சென்றார்.

கொழும்பிலுள்ள ஹோட்டலில் இவர் சீனர்களுடன் இருந்ததாகவும் இவரின் நோய் தொடர்பில் வைத்தியர்கள் சந்தேகம் கொண்டதன் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உள்ள கொரோனா சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உள்ள கொரோனா சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட முதல் நபராகவும் இவர் அடையாளப்படுத்தப்பட்டார். இந்நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் இருந்து நோயாளியை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்த அம்புலன்ஸை மறித்து வைத்தியசாலையை சூழவுள்ள பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு சென்ற மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைத்ததுடன் வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தியதாக சந்தேகத்தில் ஆறு பேரைக் கைது செய்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையை சூழ விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (இ-7)

## வெளிநாடுகளிலிருந்து வருவோரை தனிமைப்படுத்தி சுகாதாரத் துறையினருக்கு உடன் அறியத்தரவும்

### யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு வருகை தருவோரை 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தி வைக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ். தேவநேசன் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்.மாவட்ட மக்களும் தமது பூரண ஒத்துழைப்பை சுகாதாரத் துறையினருக்கு வழங்க வேண்டும். வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணம் வருவோரை தங்கள் பிரதேசத்தில் உள்ள பொதுச் சுகாதாரப் பிரிவினருக்குத் தெரியப்படுத்தி அவர்கள் கூறும் அறிவுரைகளை உரிய முறையில் பின்பற்றுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் தமிழர் பிரதேசங்களில் தனிமைப்படுத்தல்

### மக்கள் அச்சம் - சுமந்திரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து வரும் நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்களா என்பதைப் பரிசோதிப்பதற்காக அவர்களைத் தனிமைப்படுத்தி வைத்திருப்பதற்காக மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை அரசாங்கம் உபயோகிப்பதற்கு எதிராகப் பிரதேச மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்பதனை நாம் வலியுறுத்துகின்ற அதேவேளை, ஏன் இந்த ஆபத்தான நோயினைக் கையாள்வதற்கான நிலையங்களைத் தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் ஏற்படுத்த வேண்டும் என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. மேலும் இந்த நடவடிக்கையானது மக்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

எனவே நாட்டில் ஒரு சுமுக நிலைமையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அரசாங்கமானது மக்கள் செறிவற்ற பிரதேசங்களை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கண்டுபிடித்து இத்தகைய தனிமைப்படுத்தும் முகாம்களை அமைக்க வேண்டும் என நாம் வேண்டுவதோடு, மக்களின் அபிப்பிராயங்களிற்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம் என்பதனையும நாம் வலியுறுத்த விரும்புகின்றோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (இ-7)

## கொரோனா அச்சுறுத்தல்

## இந்து அறநெறிப் பாடசாலைகளை மறுஅறிவித்தல் வரை நடத்த வேண்டாம்

### பணிப்பாளர் உமாமகேஸ்வரன் அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனோ வைரஸ்தொற்று உலகின் பல நாடுகளிலும் பாரிய அச்சுறுத்தல்களோடு பரவி வருகின்ற நிலையில் அண்மையில் இலங்கையிலும் இவ் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியவர்கள் கண்டறியப்பட்ட நிலையில், பாடசாலை மாணவர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்து சமய அறநெறிப் பாடசாலைகளையும் மறு அறிவித்தல் வரும்வரை நடத்திக் கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்கின்றேன் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

# ரசிகர்கள் இல்லை, கைகுலுக்கல் இல்லை ஆஸியிடம் சரணடைந்த நியூசிலாந்து



சிட்னியில் நேற்று நடைபெற்ற முதல் ஒரு நாள் போட்டியில் கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூஸிலாந்து அணியை ஆஸ்திரேலியா அணி 71 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்று முன்னிலை வகிக்கிறது.

கொரோரோனா அச்சுறுத்தல் காரணமாக ரசிகர்கள் இன்றி இந்தப் போட்டி நடந்தது. ஆட்டம் முடிந்தவுடன் கைகுலுக்கள் இல்லை, வெறும் கைதட்டல்கள் மட்டுமே காண முடிந்தது.

முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 258 ரன்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. தொடர்ந்து ஆடிய நியூஸிலாந்து 187 ரன்களுக்கு 41 ஓவர்களில் சுருண்டது. பாட் கமின்ஸ், மிட்செல் மார்ஷ் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்ற ஹேசில்வுட், ஸாம்பா தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலியா வார்னர், பிஞ்ச் மூலம் அதிரடியாகத் தொடங்கியது. ஆனால் நியூஸிலாந்து பவுலர்கள் சீரான விக்கெட்டுகள் மூலம் ஆஸி. யைக் கட்டுப்படுத்தினர் குறிப்பாக சாண்ட்னர் ( 10 ஓவர் 34/2), இஷ் சோதி (3/51) பிரமாதமாக வீசினர். மார்னஸ் லபுஷேன் மிகப்பிரமாதமான ஒரு அரைசதத்தை எடுக்க ஆஸ்திரேலியா 258/7 என்று முடிந்தது. இதனை நியூஸிலாந்து நிச்சயம் விரட்டி விடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பிட்ச் எதிர்பார்த்ததை விட பேட்டிங்குக்குக் கடினமாக அமைந்ததோடு ஸ்டார்க், கமின்ஸ், ஹேசில்வுட் ரன்களே கொடுக்காமல் நியூஸிலாந்தை படுத்தியதோடு ஆடம் ஸாம்பா (2/50) விராட் கோலியை வெளியே இழுத்து கூக்ளியில் பவுல்டு செய்தது போல் கேன் வில்லியம்சனை வெளியே இழுத்து பவுல்டு செய்ததில் வில்லியம்சன் 19 ரன்களில் வெளியேறினார்.

டாம் லேதம் (38), கொலின் டி கிராண்ட்ஹோம் (25) என்று கொஞ்சம் அச்சுறுத்தினர். ஆனால் லேதம் ஆட்டமிழந் தவுடன் அடுத்த 40 ரன்களுக்கு படபடவென விக்கெட்டுகளை இழந்து 187 ரன்களுக்குச் சுருண்டது.

டாஸ் வென்று பேட் செய்த ஆஸ்திரேலிய அணியில் டேவிட் வார்னர் 9 பவுண்டரிகளுடன் 88 பந்துகளில் 67 ரன்களையும் கேப்டன் பிஞ்ச் 75 பந்துகளில் 3 பவுண்டரிகள் 2 சிக்சர்களுடன் 60 ரன்களையும் எடுத்து 24 ஓவர்களில் 124 ரன்கள் தொடக்கத்தை கொடுத்தனர். ஆனால் அதன் பிறகு வார்னர், பெர்கூசனிடமும், பிஞ்ச் சாண்ட்னரிடமும் பெவிலியன் திரும்ப ஸ்டீவ் ஸ்மித் 14 ரன்களில் சாண்ட்னரிடம் பவுல்டு ஆனார். டி ஆர்க்கி ஷார்ட் 19 பந்துகளில் 5 ரன்கள் என்று தடுமாறி இஷ் சோதி பந்தை வெறுப்பில் டீப்பில் அடித்து கேட்ச் ஆகி வெளியேறினார். மிட்செல் மார்ஷ் 34 பந்துகளில் 27 ரன் களை மட்டுமே எடுக்க முடிந்தது. காரணம் நியூஸி.யின் சிக்கனப் பந்து வீச்சு.

மார்ஷ், அலெக்ஸ் கேரி (1) ஆகியோரை இஷ் சோதி வீழ்த் தினார், கடைசியில் கமின்ஸ் (14), ஸ்டார்க் (9) ரன்களைச் சேர் க்க ஸ்கோர் 258/7 என்று முடிந்தது.

தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணி யை ஆஸ்திரேலியப் பந்து வீசுக் கட்டிப் போட முதல் 20 ஓவர்களில் ஓவருக்கு 3.5 என்ற ரன் விகிதத்தில் ஆமை வேகத்தில் சென்றதோடு நிகோல்ஸ், கேன் வில்லியம்சன் விக்கெட்டையும் பறிகொடுத்தது. அதிரடி வீரர் மார்டின் கப்தில் கூட 73 பந்துகளில்தான் 40 ரன்கள் எடுத்தார்.

இவரைக் கமின்ஸ் வெளியேற்ற நியூஸிலாந்து எழும்ப முடியாமல் போனது. நியூஸிலாந்து அணி தன் கடைசி 6 விக்கெட்டுகளை 89 ரன்களுக்கு இழந்து தோல்வி அடைந்தது. இந்தியாவுக்கு எதிராக செம பார்மில் இருந்த ராஸ் டெய்லர் 4 ரன்களில் மார்ஷிடம் வெளியேறினார்.



ஆட்ட நாயகனாக மிட்செல் மார்ஷ் தேர்வு செய்யப்பட்டார். வரும் ஞாயிறன்று இரு அணிகளும் இதே சிட்னி மைதானத்தில் ரசிகர்கள் இல்லாமலேயே 2வது போட்டியில் சந்திக்கின்றன.





# கண்ணீர்அஞ்சலி



அமரர்

## வில்லவராஜன் குருபவராசா

மலர்வு -09.12.1978 மறைவு- 13.03.2020

எமது பிரதேச சபையில் கடமையாற்றும் **வில்லவராஜன் குருபவராசா** அவர்கள் 13/03/2020 அன்று அகால மரணமடைந்த செய்தியறிந்து ஆழந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**வேலணை பிரதேச சபை**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**

(2598)


## அறிவித்தல்
## வலி.தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

**வட்டாரம் :- 11**
**ஆதன இலக்கம் : 71 A**
C.P.M **ஒழுங்கை**

வட்டாரம் 11 C.P.M ஒழுங்கை, ஆதன இலக்கம் 71 A இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி தெற்கு இறை " சேலை கட்டித் தோட்டம் " என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 09.00 கொண்ட இவ்வாதனமானது நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த கதிரவேலு வல்லிபுரம் பெண் தேவமணி ஆகிய இவர்களால் அவ்வூரைச் சேர்நத அவர்களது மகளாகிய சம்மிக்கேல் பெண் கிளாடிஸ் றஞ்சிதமாலாவுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேறிய 7914 ஆம் இலக்க 14.09.2004 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிசு திரு. ஆ . குமாரசுவாமி முகதாவில் நிறைவேறிய 6886 ஆம் இலக்க 26.11.2002 ஆம் திகதிய நன்கொடை உறுதியின் மூலம் கதிரவேலு வல்லிபுரம் பெண் தேவமணிக்கு வந்தடைந்ததாகும். இவ்வுறுதியின் தாயுறுதி 6885 ஆம் இலக்க 26.11.2002 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு திரு.ஆ.குமாரசுவாமி அவர்களால் எழுதப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியாகும். இவ் உறுதியில் தாய் உறுதியின் இலக்கம் குறிப்பிடப்படவில்லை. நில அளவையாளர் திரு.S.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2019/1546 ஆம் இலக்க 2019.11.15 ஆம் திகதிய நிவஅளவைப்படத்தின் பிரகாரம் "சேலை கட்டித் தோட்டம்" நிலப்பரப்பு 01 குளி 09.00 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத்திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராலாவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ் வாதனமானது சம்மிக்கேல் பெண் கிளாடிஸ் றஞ்சிதமாலா என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.




தவிசாளர், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்துதல்

கொரோனா வைரசிடமிருந்து தற்காத்துக் கொள்ளும் நடவடிக்கையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கற்றல் நடவடிக்கைகள் யாவும் 14.03.2020 இலிருந்து தற்காலிகமாக இருவாரங்களுக்கு இடைநிறுத்தப்படுகின்றன.

விடுதி மாணவர்கள் 14.03.2020 பி.ப 06.00 மணியுடன் விடுதியிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(c-9486)

பதிவாளர்


குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம் :14.03.2020 சனிக்கிழமை தொடக்கம்
20.03.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் : துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்

## யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்

இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 0212222772

(C-9488)

# கூட்டுறவுத்துறையூடாக தாராளமாக பொருட்கள் வழங்கப்படும்

# மக்கள் அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்வதைத் தவிருங்கள்

## யாழ்.அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் அனைத்தும் கூட்டுறவுத் துறையூடாக தாராளமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் பொதுமக்கள் அளவுக்கு அதிகமாகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தட்டுப்பாட்டுப் பீதியை ஏற்படுத்த வேண்டாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளி கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசாங்கம் சகல பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியது.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் எதிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டதுடன் தேவைக்கு அதிகமான கொள்வனவுகளிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை பொருட்களைப் பதுக்கும் வர்த்தக நிலையங்கள் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மீது பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினர் சுற்றி வளைப்புக்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.



அரசாங்கத்தால் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னாயத்த நடவடிக்கைகளாக மக்கள் கூட்டமாக ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கைகளைச் சுத்தப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம் இதுவரை அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தாத நிலையில் கொரோனா வைரஸ் தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ளாது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-101)

## கொரோனா வைரஸ் பற்றி பணிக்குழாமினருக்கு அறிவூட்டல் ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பற்றி அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் பணிக்குழாமினருக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. நோயை அறிந்துகொள்ளுதல், அதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வைத்தியர் தேசாந்த திஸாநாயக்க பணிக்குழாமினருக்கு தெளிவுபடுத்தினார்.

இதற்கமைய அரச, தனியார் துறை நிறுவனங்கள் தொடர்ச்சியாக இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

நிறுவன ஊழியர்கள் தாம் பெற்றுக்கொள்ளும் அறிவை தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் சமூகத்திற்கும் வழங்குவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வைரஸ் தொற்று தேசிய பிரச்சினையாக மாறுவதைத் தவிர்ப்பதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) கே.பி.எகொடவெல உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (இ-7)

## பொதுக்கூட்டம் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் மத்திய கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு அமைவாக பாடசாலைகளில் முன்னேற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளைப் பிற்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் பிற்போடப்படுகின்றது. பொதுக்கூட்டம் நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அதிபர் அறிவித்துள்ளார். (இ

## வழக்கை வாபஸ் பெறுவதற்கு காற்றாலை நிறுவனம் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ பகுதியிலுள்ள பெண்கள் மற்றும் மக்கள் பிரதிநிதி ஒருவர் உள்ளிட்ட பிரதேச மக்கள் எட்டுப் பேர் மீது தொடுக்கப்பட்ட வழக்கை வாபஸ் பெறுவதாக காற்றாலை நிறுவனத்தினர் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனிடம் உறுதியளித்தனர்.

தென்மராட்சி-மறவன்புலோ குடியிருப்பு பகுதியில் காற்றாலை அமைப்பதற்கு பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர். இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் காற்றாலை நிறுவனத்தினரின் செயற்பாட்டை நிறுத்தக்கோரி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது பொதுமக்களால் காற்றாலை நிறுவன உடைமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டதாகக் கூறி காற்றாலை நிறுவனத்தினர் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பெண்கள், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் உள்ளிட்ட எட்டு பொதுமக்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டும் உள்ளது. இந் நிலையில் கடந்த புதன்கிழமை காற்றாலை நிறுவனத்தினர் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய மைதான சுற்றுமதிலுக்கு 20 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ததுடன், அடிக்கல் நாட்டும் நிகழ்விற்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜனையும் அழைத்திருந்தனர். இதன்போது காற்றாலை நிறுவனத்திற்கும்-மறவன்புலோ மக்களுக்கும் இடையில் தற்போது சிறந்த புரிந்துணர்வு காணப்படுகின்ற போதிலும் தம் மீது தொடுக்கப்பட்ட வழக்கை குறித்த நிறுவனம் வாபஸ் பெறாமல் இன்னமும் தொடர்ந்து வருவதாக கவலை வெளியிட்டனர். பொதுமக்களின் கோரிக்கைக்கு இணங்கி மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவர் அங்கஜன் மறவன்புலோ காற்றாலை மின் உற்பத்தி நிலைய பிரதம பொறியியலாளர் சிறிதரனிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் வருகின்ற மே மாதம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெறவுள்ள மூன்றாவது வழக்குத் தவணையின் போது குறித்த வழக்கை தள்ளுபடி செய்யக் கோருவதாக உறுதியளித்தார். (இ-30)

## 'சுனாமி' திரையிடல் பிற்போடல்

(யுாழ்ப்பாணம்)

ரசனை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இன்று 14 ஆம் திகதி பருத்தித்துறை S.S. திரையரங்கிலும் நாளை 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கிலும் திரையிடப்படவிருந்த 'சுனாமி' திரைப்படம் நாட்டின் சீரற்ற சுகாதார சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டது. (இ

**மருந்து இல்லா/மருந்து வைத்தியம்**

பலகாலமாக பல விதமான வைத்தியங்கள் செய்தும் சுகம் பெறாதவர்களும், உங்களின் நோயை மாற்ற முடியாது என்று கூறப்பட்டவர்களுக்குமான சிறப்பு சிகிச்சைகள்.

முள்ளந்தண்டு விலகல், கழுத்து திருப்ப முடியாமை, கை தூக்க முடியாமை, இடுப்பு, தோள் வலி, கை,கால் விறைப்பு, மூலம், தோல் நோய்கள், வாத ரோகங்கள், குழந்தை இன்மை.

சனி, ஞாயிறு மட்டும் (க-865)

Dr.R.Sivagurunathan ,077 730 1669

41,கண்டி வீதி,யாழ்ப்பாணம்.

## இராசி பலன்

**மீனம்:** காலையில் சலசலப்பும், மாலையில் கலகலப்புமாக அமையலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

**மேடம்:** காலையில் கலகலப்பும், மாலையல் சலசலப்புமாக அமையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், வியாபார விருத்தியுண்டு.

**கும்பம்:** தொழில் நலன்கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| சூரி | சுக் | | ராகு |
| புத | இராசி பலன் | | |
| | | | |
| சனி.செவ் கேது.குரு | சந் | | |

சந்திராஷ்டமம்

ரேவதி, அச்சுவினி

**14.03.2020**

பங்குனி 01,சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 12.52 மணிவரை

விசாகம் முன்னிரவு 6.29 மணிவரை

சுபநேரம் 3.21-4.51 மணிவரை

இராகுகாலம் 9.21-10.51 மணிவரை

காரடையா நோன்பு

கடையை நடத்தினால் கடை உன்னை நடத்தும்

வளவன்

**கடகம்:** புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


**தனுசு:** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**துலாம்:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

# வெங்காயச் செய்கையில் சவாலாக மாறியுள்ள தாள்கோதிப்புழுக்கள்



யாழ்.மாவட்டத்தில் சின்ன வெங்காயம் பயிரிடப்படும் இடங்களில் வடமராட்சிப்பகுதி முக்கிய இடம் வகிக்கின்றது. இதில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கரவெட்டி மற்றும் துன்னாலை விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இம்முறை பெரும்போகத்தில் 170 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது வெங்காயச் செய்கையானது அறுவடையை அண்மித்துள்ள தருணத்தில் வெங்காயத்தாள்களைத் தாக்கும் பீடையாகிய தாள்கோதிப்புழுவின் தாக்கம் பெரும் சவாலாக மாறி வருகின்றது.

இரண்டு வகையான தாள் கோதிப்புழுக்கள் வெங்காயத்தில் சேதம் விளைவிக்கின்றன.

1.ஸ்பொடப்டெராலிற்ரூறா (Spodopteralitura)

2.ஸ்பொடப்டெராஎக்சிகுவா (Spodopteraexigua).

**பீடையை இனங்காணல்**

இவற்றின் நிறையுடலியான கபில நிறமான அந்துப்பூச்சிகள் இலையின் நுனிப்பகுதியில் கூட்டமாக முட்டையிடும். முட்டையிலிருந்து வெளியேறும் சிறிய புழுக்கள் முதலில் இலையின் மேற்புறமாகவுள்ள பச்சை நிறமான பகுதிகளை உண்ணத் தொடங்கும். இதன் பின்பு இலையைத் துளைத்து உட்சென்று அதனுள்ளிருந்து உண்ணும். பகல் வேளைகளில் இலையின் அடிப்பகுதியில் மறைந்து காணப்படுவதுடன் காலை மற்றும் மாலை வேளைகளில் இலைகளில் அவதானிக்க முடியும். புழுக்கள் பச்சை மற்றும் கபில நிறமாகக் காணப்படுவதுடன் உடலின் இரு புறமும் தெளிவான வெண்ணிற கோடுகளை அவதானிக்க முடியும்.

சாதாரணமாக இப்புழுவின் தாக்கம் நடுகை செய்து 25 நாட்களில் அவதானிக்கப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படும். இம்முறை குடித்தொகையின் அபரிமித வளர்ச்சி காரணமாக 45 நாட்களின் பின்பும் இப்புழுக்களின் தாக்கம் காணப்படுவதுடன் பயிர்ச்செய்கையில் கட்டுப்படுத்தப்படாத புழுக்கள் நடுகைக்காக சேமிக்கப்பட்டுள்ள குமிழ்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்கமானது கரவெட்டி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கரணவாய் மேற்கு கிராமத்திலும் துன்னாலை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் அத்தாய் கிராமத்திலும் அதிகளவில் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளது. மேலும் அம்பன் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலும் இப்புழுக்களின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.

**அறிகுறிகள்**

இப்புழுக்களின் தாக்கத்தை பின்வரும் அறிகுறிகளைக் கொண்டு இனம் காண முடியும்

- இலைகளின் நுனிப் பகுதியில் கூட்டமாக இடப்பட்ட முட்டைகளை அவதானிக்க முடியும்.
- இலைகளின் நுனிப்பகுதி பச்சை நிறமற்று கருகிக் காணப்படுவதுடன் தாள்களின் உட்புறம் புழுக்களை அவதானிக்க முடியும்.
- காலை மற்றும் மாலை நேரங்களிலும் புழுக்களின் நடமாட்டத்தை அவதானிக்க முடியும். அத்துடன் இவற்றை இரையாகக் கொள்ளும் கொக்கு,காகம் முதலான பறவைகளை அவதானிக்க முடியும்.
- மண்ணின் உள்ளே இதன் கூட்டுப்புழுக்களை அவதானிக்க முடியும்.
- சேமிப்பிலும் இதன் தாக்கம் காணப்படுவதனால் புழுக்களை சேமிக்கப்பட்டுள்ள குமிழ்களிலும் அவதானிக்க முடியும்.

**முகாமைத்துவம்**

- கடந்த போகத்தில் எஞ்சிய பயிர் மீதிகளை அகற்றிவிடுதல்.
- வயல் சுகாதாரத்தைப் பேணுதல்.
- பயிரின் அடிப்பாகம் மற்றும் இலைகளின் உட்புறம் புழுக்கள் காணப்படுகின்றதா? என்பதனை தொடர்ச்சியாகக் கண்காணித்தல்.
- இலைகளில் துளைகள் காணப்படுகின்றதா? என்பதனை அவதானித்தல்.
- இலைகளில் காணப்படும் முட்டைகள் மற்றும் புழுக்களை கைகளால் பொறுக்கி அழித்தல்.
- புழுக்களின் தாக்கம் அவதானிக்கப்படின் சிபாரிசு செய்யப்பட்ட பின்வரும் பீடைநாசினிகளைப் பயன்படுத்தலாம்.

Emamectin benzoate 5% SG ( Proclaim – புறொகிலம்) - 4g/10 லீற்றர் நீரில் கலந்து பிரயோகிக்க வேண்டும்.

Chlorfluazuron 50g/l EC–10 ml/ 10 லீற்றர் நீரில் கலந்து பிரயோகிக்க வேண்டும்.

Chlorantraniliprole 20% + Thiomethoxam 20% WC (Virtako40 WG)–2.5g/10 லீற்றர் நீரில் கலந்து பிரயோகிக்க வேண்டும்.

Fipronil 50g/l SC–10ml/10 லீற்றர் நீரில் கலந்து பிரயோகிக்க வேண்டும்.

கிருமிநாசினி விசிறும் போது பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்துங்கள்.

குமிழ்களை நடுகைக்கு சேமிப்பதாயின் அறுவடைக்கு பத்து நாட்களுக்கு முன்னர் தரப்பட்ட நாசினிகளில் ஒன்றைப் பிரயோகித்த பின்பு அறுவடையை மேற்கொள்ளவும். அறுவடை செய்த பின்பும் புழுக்கள் இல்லை என்பதனை உறுதி செய்து சேமிப்பதன் மூலம் இவற்றின் பாதிப்பை தவிர்க்க முடியும்.

**கி.ஸ்கொட் பசீலன்**
**விவசாயப்போதனாசிரியர்**
**கரவெட்டி.**

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான வருஷ திவ்விய மஹோற்சவம் (வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்) எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பஞ்சரதோற்சவமும் மறுநாள் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-5)

# அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உயிர்க்கொல்லி நோயான கோரோனா வைரஸ் தொற்று இலங்கையிலும் பரவியுள்ள காரணத்தால் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இது தொடர்பான முன்னாயத்தம் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கை களை முன்னெடுக்கும் பொருட்டு நல்லூர் பிரதேச சபையில் விசேட கூட்டத்தை கூட்டுமாறு உறுப்பினர் கு.மதுசுதன் தவிசாளரிடம் அவசர கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளரை நேரடியாகச் சந்தித்து தனது கையொப்பத்துடன் கூடிய அவசரக் கோரிக்கை மனுவொன்றைக் கையளித்தார். (இ-18)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை-09 மணி முதல் பிற்பகல்-02 மணி வரை வண்ணை வைத்தீஸ் வராக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள மேற்படி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

இந்த இரத்ததான முகாமில் ஆர்வமுள்ள குருதிக் கொடையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்க முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-18)

# பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் ஆலய வருடாந்த பெருவிழா இன்று சனிக்கிழமை மாலை 5.45 மணியளவில் திருச்செப மாலையுடன் கொடியேற்றம் ஆரம்பமாகி தொடர்ந்து திருப்பலி பூசைகள் நடைபெறும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை 5.45 மணியளவில் நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் 19 ஆம் திகதி காலை 6.15 மணியளவில் பெருவிழா திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது. (இ-105)

# யாழிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு







கொரோனோ வைரஸ் பரவும் அபாயம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகவும் பொதுமக்கள் யாழிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். அந்த வகையில் யாழ்.நகர் மற்றும் திருநெல்வேலி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் எரிபொருளுக்காக காத்திருப்பதைப் படங்களில் காணலாம். (இ-18)

# டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் க.பொ.த.(உ/த) மற்றும் NVQ தகைமை உடைய மாணவர்களுக்கான பின்வரும் டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கு தகைமை உடைய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

- தேசிய நிதிக் கணக்கியல் டிப்ளோமா (NDFA) -NVQ மட்டம் 5& 6–முழுநேரம் மற்றும் பகுதி நேரம்.
- தேசிய தொலைத் தொடர்பு தொழில்நுட்ப டிப்ளோமா (Telecommunication) NVQ மட்டம் 5 மற்றும் 6–முழுநேரம்.
- தேசிய கணிய அளவையியல் தொழில்நுட்ப டிப்ளோமா (Quantity Surveying) NVQ மட்டம் 5–முழு நேரம்.
- தேசிய நிர்மாண தொழில்நுட்ப டிப்ளோமா (Construction Technology) NVQ மட்டம் 5– பகுதி நேரம்.

மேலதிக விபரங்களுக்கு தொழில்நுட்பவியல் கல்லூரியுடன் நேரடியாக அல்லது 021221 2403 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# பயிற்சி நெறிகளுக்குப் பதியலாம்

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பயிற்சிநெறிகள் கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் வழக்கப்பட இருப்பதால் பயன்பெற விரும்புவோர் பதிவுகளை 20.03.2020 இற்கு முன்னர் விதாதாவள நிலையத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக தகவல்களுக்கு 077 186 9015 / 077 7466 067 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

1. கணனி photoshop வடிவமைப்பு.
2. காளான்சார் உணவுப் பொருட்கள் தயாரித்தல்.
3. Pine oil emulsifier.
4. அரிசிசார் உணவுப் பொருட்கள் தயாரித்தல் என்பனவாகும். (இ

# கோட்ட மட்டத்தில் சம்பியன்



(கரணவாய்)

பருத்தித்துறை கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையில் கடந்த வாரம் இடம்பெற்ற செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தரம் 5 கலப்பு அணி பிரிவில் கெருடாவில் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை அணி சம்பியனானது. (இ-60)

# சேவை நலன் பாராட்டுதல்

## பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திரு.தர்மலிங்கம் மோகனதாஸ் அவர்கள் ஆசிரிய சேவையில் இணைந்து எமது மாணவச் செல்வங்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி அகவை அறுபதைப் பூர்த்தி செய்து (13.03.2020) இன்று முதல் ஓய்வுபெறும் தங்களது ஓய்வுக் காலம் நலமாக அமைய வாழ்த்துகின்றேன். இணைந்த கணிதத்தில் சாதனை படைத்து பாடசாலை சமூகத்துக்கு அச்சாணி போன்று செயற்பட்டு ஆசிரியர்களுக்கு நேரகூசியைச் செவ்வனே செய்து நிர்வாகத்திறன் மூலம் பாடசாலை வளர்ச்சியடைய அயராது உழைத்து நல்லாசிரியராகப் பணிபுரிந்தவர். பாடசாலை பணிக்காலத்தில் மாணவர்களின் முன்னேற்றத்திலும் பாடசாலை கடமைப் பொறுப்புக்களிலும் தன்னையே அர்ப்பணித்து கடமையைச் செவ்வனே நிறைவேற்றியவர். இவரின் வழிகாட்டலில் மாணவர் சமுதாயம் பல்வேறு துறைகளில் மேன்மையடைந்து மிளிர்வதைக் காணலாம். இவரது சேவையால் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகமும் பெருமையடைகின்றது. மன அமைதியுடன் சகல செல்வங்களும் பெற்று நீண்டகாலம் குடும்பத்துடன் இன்பமாக வாழ்ந்து மேலும் சமூக வாழ்வில் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**தி.ஞானசுந்தரன்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்),**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்.**

## வாழ்க வளமுடன்

ஆசிரியராய், பகுதித் தலைவராய், பிரதி அதிபராய் முப்பத்திரண்டு ஆண்டுகள் கல்விச் சேவையில் அயராது உழைப்பு நல்கி சேவையில் இருந்து ஓய்வுபெறும் மதிப்பிற்குரிய தர்மலிங்கம் மோகனதாஸ் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலே மட்டற்ற மகிழ்வெய்துகின்றேன். நேர்மை, கண்ணியம், தன்னடக்கம், பொறுமை, செயற்றிறன் ஆகிய ஒப்பற்ற பண்பிற்குரியவராக விளங்கி என் தலைமைத்துவத்தின் கீழ் ஸ்ரான்லிக் கல்லூரியிலும் கொக்குவில் இந்துவிலும் பிரதியதிபராகப் பாரஞ் சுமந்த அந்த எட்டு ஆண்டுகளை எண்ணிப் பார்க்கின்றேன். என்னுடைய சேவைக் காலத்தில் மனம் தொட்டு ஊடுருவி நின்ற மாமனிதனாக நினைவில் கொள்கின்றேன்.

தன் பணியில் சிரத்தையுடனும் சாதுரியமாகவும் செய்து முடிக்கும் திறன் இவரின் இயல்பான தன்மை, நம்பிக்கை, விசுவாசம் நிறுவன நல்நோக்கம் கொண்ட பணி ஓய்வடைகின்றதா? விழாக்களைக் கொண்டு நடத்தும் செயற்றிறன், பிணக்குகளை சமரசப் படுத்தும் தகைமை, எல்லாமே என் மனக்கண் பதிவுகள் தான். எல்லோரிடத்தும் அரவணைத்துப் போகும் நல்லுள்ளத்தால் தமது சேவையாற்றிய அனைத்துப் பாடசாலைகளிலும் தனக்கென தனியான மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுக் கொண்டவர். இவரது குடும்பமே எமக்கு உறவாகி மலர்ந்திருக்கின்றது. இவரின் ஓய்வுக் காலம் மகிழ்ச்சியும் குதூகலமும் அமைதியும் சிறப்பும் நிறைந்த குடும்ப வாழ்வாய் மலர என்றும் எனது வாழ்த்துக்களைச் சொரிகின்றேன்.

**வே.ஞானகாந்தன்,**
**ஓய்வு நிலை அதிபர்.**



## திரு.தர்மலிங்கம் மோகனதாஸ்

**B.Sc.Dip.in.Education S.L.T.S-I**

யா/எகொக்குவில் இந்துக் கல்லூரி பிரதி அதிபர்

**சேவை விபரம்:**
ப/பசறை தமிழ் வித்தியாலயம்
27.12.1988-26.06.1995
யா/ கொக்குவில் நாமகள் வித்தியாலயம்
27.06.1995-10.07.1997
யா/கனகரத்தினம் மகாவித்தியாலயம்
11.07.1997-14.10.2012
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
15.10.2012-13.03.2020

## ஆசிரியர் முழுநிலவுக்கு மணிவிழா

யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரியில் இணைந்த கணிதம் கற்பிக்கவென்று வந்து பாடசாலையில் பிரதி அதிபர் என்ற பதவியை பெற்ற பாடசாலையின் முகாமைத்துவ செயற்பாடுகளை இனிதே நிறைவேற்றிய திரு. தர்மலிங்கம் மோகனதாஸ் அவர்களின் ஓய்வுக்காலம் சிறந்து விளங்க எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி என்றென்றும் அருள்புரிய வேண்டி ஆசி வழங்குகின்றேன்.

**க.சிவதாஸ்குருக்கள்,**
**பிரதம குரு,**
**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயம்.**

## சேவை நயப்பதில் பேருவகை கொள்கின்றேன்

மோகனதாஸ் சேர்! இவரை நான் முதலில் சந்தித்தது கனகரட்ணம் மகா வித்தியாலயத்தின் உப அதிபராக கடமையாற்றிய வேளையாகும். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளை மறுகேள்விக்கு இடமில்லாது மிக நேர்த்தியாக செய்து முடிப்பது இவருக்கான தனித்துவமாகும். எமது கல்லூரியில் 2012.10.15 முதல் உப அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்ற காலம் முதல் அவர் பணி ஓய்வு பெற்றுக்கொள்கின்ற இன்றைய நாள்வரைக்கும் எமது கல்லூரியினது பரீட்சைப் பகுதிக்குப் பொறுப்பாகவும், பாடசாலையின் வருடாந்த பொருட் தொகுப்பு, விளையாட்டுப் போட்டி விழா.... என எடுத்துக் கொண்ட அத்தனை பொறுப்புக்களையும் கனகச்சிதமாக நிறைவேற்றிவிட்டு ஆர்ப்பாட்டம் ஏதுமின்றிப் புன்சிரிப்புடனும் மன நிறைவு கொள்வது அவரது தனித்துவமாகும்.

திணைக்களம் கேட்கின்ற எந்த தரவாக இருந்தாலும் மறுகேள்விக்கு இடமின்றி கனகச்சிதமாக அவற்றினைத் தொகுத்தும், பகுத்தும் ஒழுங்கமைத்தும் வழங்குவதில் ஒரு தனித்துவத்தைப் பின்பற்றியவர்.

தான் வகித்துக் கொண்ட கடமையினை நேர்மையுடனும், பக்கச் சார்பற்றும், திறமையுடனும் செய்து இன்று பணி ஓய்வினூடாக மணிவிழாக் காணும் நாயகன் இவர் தம் வெற்றிக்கெல்லாம் தோன்ற துணையாக நின்ற திருமதி மோகனதாஸ் அம்மையார், பிள்ளைகள் நோய் நொடியற்று நீண்ட பெருவாழ்வினை வாழவும், மாண்புற வாழ்த்தி, எல்லாம் வல்ல கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியனது திருவருளும் யோகர் சுவாமிகளின் குருவருளும் துணைநிற்க வேண்டி மணிவிழா நாயகனை நயப்பதில் பேருவகையடைகின்றேன்.

**ம. ஞானசம்பந்தன், அதிபர்**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

## பல்துறை ஆசானை வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் பிரதி அதிபராக செயற்பட்டு பாடசாலையில் நிர்வாக செயற்பாடுகளில் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல், தீர்மானம் எடுத்தல் போன்ற முகாமைக் கருமங்களை கடந்த எட்டு வருடங்களாக மேற்கொண்டு தன்னையே பாடசாலைக்கு அர்ப்பணித்து சேவையாற்றிய திரு.தர்மலிங்கம் மோகனதாஸ் அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் ஆசிரியர் நலன்புரிக் கழகம் பெருமையடைகின்றது. ஆசிரியர்களுடன் நட்பாக பழகி புன்னகையாலே பல பணிபுரிந்து, தம்பி என்று கூறி வழிகாட்டும் தலைவர் 14.03.2020 ஆசிரிய சேவையில் ஓய்வு பெறும் த.மோகனதாஸ் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் நீண்டகாலம் சகல சௌபாக்கியங்களும் பெற்று குடும்பத்தினருடன் மகிழ்வாக வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(சி-9464)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 16 ¼ செவ் 6 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. பிரான்ஸ் (PR)
எதிர்பார்ப்பு: படித்த பெண். பிரான்ஸ் விரும்பத்தக்கது.
தொ.இ: B/10650

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 32 செவ் 9 இல்
உயரம்:5'9"
தகைமை/தொழில்: டிப்ளோமா. Assistant Management.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண். விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: B/10652

பிறப்பு: 1971 இந்து
நட்ச்த்திரம்: புனர்பூசம்
கி.பா: - செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. நெதர்லாண்டில் கடை.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10653

பிறப்பு:1979 இந்து
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: 28 செவ் 2 இல்
தகைமை/தொழில்: :Master M.A. ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண்
தொ.B/10654

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 23 ½ செவ் 6 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:B.SC
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்.
தொ.இ: G/10699

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 19 3/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS. ஆயுள் வேத வைத்தியர்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்.
தொ.இ: G/7379

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பட்டதாரி தகவல் உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்
தொ.இ: G/7377

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 23 ½ செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MBBS. பயிற்றுநர்
எதிர்பார்ப்பு: Doctor, Engineer.
தொ.இ: G/7382

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# கடல்நீர் உட்புகுந்ததால் 22 வீடுகள் நீரில் மூழ்கின

(களுத்துறை)

களுத்துறை வடக்கு கெலிடோ கடற்கரைப் பகுதியில், நேற்று முன்தினம் அதிகாலை ஐந்து மணியளவில் கடல் நீர் திடீரென உட்புகுந்ததால், 22 வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால், அப்பகுதி மக்கள் அச்ச மடைந்தனர்.



இதற்கமைய, கெலிடோ நேர் வீதி, குறுக்கு வீதி என்பன நீரில் மூழ்கி காட்சியளித்ததுடன், மீனவ குடியிருப்புகள் மற்றும் அவர்களின் உபகரணங்களுக்கும் இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, 22 குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு, அரசாங்க அதிபர் அறிவுறுத்தினார். (ஐ)

# கிஹானுக்கு எதிரான மனு மே 4 இல் விசாரணைக்கு

(கொழும்பு)

பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை மே மாதம் 4 ஆம் திகதியன்று எடுத்துக்கொள்வதெனத் தீர்மானித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அதுவரை அவரைக் கைது செய்வதற்காக விதிக்கப்பட்ட தடையையும் அன்றைய தினம் வரை நீடித்து உத்தரவிட்டது.

ஏ.எச்.எம், நவாஸ் சோபிதா ராஜகருணா ஆகிய நீதிபதி குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# பங்குச் சந்தை நடவடிக்கை இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் இந்த வாரத்தில் மூன்றாவது தடவையாகவும் நேற்று 30 நிமிடங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

கொழும்பு பங்குச் சந்தையின் S&P SL20 5.04 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளமையால் இவ்வாறு பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் இடை நிறுத்தப் பட்டுள்ளன.

இதற்கமைய அனைத்து பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் 2.98% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கொழும்பு பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் இவ்வாறு தொடர்ச்சியாக இடைநிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–206

## இந்நூற்றாண்டில் சவாலாக வெட்டுக்கிளியும் கொரோனாவும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இயற்கையின் விபரீதமோ எனத் தோற்றமளிக்கும் வகையில் அவ்வப்போது காடுகள் தீப்பற்றி எரிவதும், வெள்ளப் பெருக்கு மற்றும் வரட்சி தாண்டவமாடுவதும் சுனாமியலை உக்கிரம் பெறுவதும் இன்னும் அதீத பனிப்பொழிவு என பலவற்றைக் கேள்விப்பட்டிருக்கின்றோம் இன்னும் அனுபவித்துமிருக்கின்றோம்.

அவற்றின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டாலும் 21ஆம் நூற்றாண்டின் சவால்களாக வெட்டுக்கிளியெனும் பூச்சி பீடையின் படையெடுப்பும் பரந்துபட்டளவில் மனிதர்களில் தொற்றும் கொரோனா (COVID19) வைரசுவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முன்னிலை நிறுவனங்களான உணவு மற்றும் விவசாய தாபனத்தினாலும் (Food and Agriculture Organization) உலக சுகாதார தாபனத்தினாலும்(World Health Organization) இவை பற்றி உலக மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கி ன்றன. இவையிரண்டையும் நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. பாரியளவிலான சேதமும் மனித அழிவும் பலநாடுகளில் நடைபெறுவதை கேட்டறிந்தும் எமது நாட்டிலும் இவ் வைரசுவின் பரவுகை பற்றி ஒவ்வொரு மணிக்கணக்கிலும் நாம் அறியும் இவ் வேளையில் எமது மக்களும் ஒன்றிணைந்து இத் தொற்று நோயினை பரவவிடாது பாதுகாப் பதில் முழுமையாகப் பங்களிக்க வேண்டும்.

இரண்டினதும் தாக்கத்தை குறைக்க அவற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்க ஒவ்வொரு மனிதனும் அதீத கரிசனை காட்டுவதுடன் முழுமையாக ஈடுபடல் வேண்டும். எமக்கென்ன என்னும் மனப்பாங்கு இறுதியில் எம்மை இக்கட்டான நிலைக்குள் தள்ளிவிடும். வருமுன் காத்தல் மிகவும் சிறந்தது (Prevention is better than Curative) என்பதனை முன் கூட்டியே சொல்லி வைத்ததற்கு அர்த்தம் இதுதானே. நோய் வந்த பின்னர் அதனை உடனடியாக கட்டுப்படுத்தல் அவ்வளவு சாத்தியமில்லை என்பதற்கு நல்ல உதாரணமாக கொரோனா வைரசு (COVID 19) தாக்கத்தைக் குறிப்பிடலாம்.

இவ்வைரசுவின் தாக்கத்தினால் பலர் உயிரிழந்திருக்கும் நிலையில் இன்னும் பலர் பலநாடுகளில் தொற்றுக்கு இலக்காக்கி இருப் பது தெரிய வருகின்றது.

இந்த நிலையில் சீன விஞ்ஞானிகளின் தகவலின்படி கொரோனா வைரசுவில் இரண்டு வகைகள் இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இன்னும் வரவரப் பிரச்சினைகள் கூடும் போலவே தெரிகின்றது. நோய்த் தொற்று ஆரம்பித்த இடமான சீனாவின் யுகான் மாகாணத்தில் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தாலும் இவ்வைரசு ஏனைய நாடுகளுக்கு விரைந்து பரவுவதனை கட்டுப்படுத்த முடியாதிருப்பதனை அறியமுடிகின்றது.

அநேகமான விமான போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டும் நோயின் குணங்குறிகளுடையவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தி முதலில் மற்றையவர்களுக்கு தொற்றாமலும் நோயுற்றவரை குணப்படுத்தவும் எடுக்கப்படும் பலவிதமான முயற்சிகளுக்கும் நாம் ஒத்தாசை புரிதல் வேண்டும்.

இவ்வாறான தொற்று நோய்கள் பரவுவதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவினை நாம் கொடுப்பதுடன் அந்தந்த பிரதேசங்களில் உள்ள மக்கள் மிகவும் விழிப்பாகவும் நோய் மற்றையவர்களுக்கு பரவாமல் தடுப்பதற்கான முறைகளில் ஒவ்வொருவரும் பங்களிக்கவும் ஒத்துழைக்கவும் வேண்டும்.

மக்கள் பொறுமை காப்பது மிகவும் அவசியமானதாகும். சுகாதார திணைக்களத்தினால் வரையறை செய்யப்படும் அனைத்து நோய்த்தடுப்பு முயற்சிகளுக்கும் தீர்மானங்களுக்கும் மக்கள் அனைவரும் கட்டுப்படுதல் அவசியமாகும்.

எமது நாட்டில் நோயினைப் பரவாமல் தடுப்பதற்கான விழிப்புணர்ச்சிகளை அனைத்து பகுதிகளிலும் விரைந்து செய்தல் வேண்டும். மக்களுக்கு இதுபற்றி ஊடகங்கள் வாயிலாக அறிவூட்டுவது மிகமிக அவசியமாகும். அந்தந்த பகுதிகளிலுள்ள தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவ னங்கள் அனைத்தும் இதில் உதவிக்கரம் நீட்டவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை பாதுகாத்துக்கொள்ளும் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுதல் வேண்டும்.

தனிமனித ஒழுக்கம் மிகவும் அவசியமானதாகும். தேவையற்ற வகையில் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல், தொற்று ஏற்படுவதற்கான இடங்களை கவனித்தறிந்து அவற்றினைத் தவிர்த்தல், கைகளை சவர்க்காரம் பயன்படுத்தி அடிக்கடி கழுவுதல் மிக முக்கியமானதாகும். பொது இடங்களில் இருக்கும் போது தேவையற்று முகத்தினை வெற்றுக் கைகளினால் தொடுதலையும் தவிர்க்க வேண்டும். ஒருவர் தும்மும் போதும் இருமும் போதும் முகத்தினை துணியினால் மூடித் தும்முதல் மற்றையவர்களுக்கு இந்நோயினை பரவவிடாது தடுக்கலாம். தும்மும் போதும் இருமும் போதும் வெளியில் வெளிவரும் துணிக்கைகளில் கொரோனா வைரசும் சேர்ந்து சென்று மற்றையவர்களில் தொற்றினை ஏற்படுத்தும் முதன்மைக் காரணியாக இருக்கின்றது.

இதுதவிர மேலும் பல வழிகளில் நோயுற்ற ஒருவர் பயன்படுத்தும் பொருட்களினூடாக இவ் வைரசு பரவுவதற்கு வழிகள் இருக்கின்ற காரணத்தினால் ஒருவர் தனது பாதுகாப்பினை முழுமையாக உறுதி செய்வதற்கான வழி வகைகளை கேட்டறிந்து அதன்பால் நடந்து கொள்வது அவருக்கும் ஏனையவர்களுக்கும் உதவியாக இருக்கும்.

மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல மக்களை தேவையற்ற விதத்தில் பயமுறுத்துதலும் பயப்பீதியை ஏற்படுத்துதலும் தவிர்க்கப்படல் வேண்டும். கதைகாவிகளாக நாம் இல்லாமல் ஆக்கபூர்வமான பொறுப்புடைய பிரஜைகளாக நடத்தல் இத்தருணத்தில் மிகமிக அவசியமானதாகும்.

அநாவசியமற்ற உந்துதலால் மக்கள் முண்டியடித்து கடைகளில் பொருட்களை வாங்கி சேமித்து வைக்கும் செயலைக் காண முடிகின்றது. "தவித்த முயலடித்த கதையாக" ஒரு சில வியாபாரிகள் தமது பொருட்கள் நீண்ட காலமாக கடைகளில் விலைப் படாமல் இருக்கும் நிலையிலும் அநேகமான உணவுப்பொருட்கள் அல்லது தின்பண்டங்கள் அவற்றுக்கான காலாவதி திகதி முடிவுறும் அல்லது அண்மித்திருக்கின்ற நிலையிலும் அவற்றை விற்றுத்தீர்க்கும் வித்தையாக செயற்கையாக ஒரு நிலைமையை தோற்றுவித்து பொதுமக்களை முண்டியடிக்க வைத்து விற்றுத் தீர்க்கும் உபாயத்தைக்கையாள்வதை காண முடிகின்றது.

இதற்கு மக்கள் செவி சாய்க்காது தமக்கு தேவையான மற்றும் குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி பயன்படுத்துதல் நல்லது. எந்த நேரத்திலும் இவ்வாறான காலகட்டத்தில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு வருவதில்லை. அதனை அறிந்து கொண்டால் இவ்வாறான நிலைமையை உணர்ந்து சமாளிக்க முடியும். யாரோ ஓரிருவர் செய்கின்ற இவ்வாறாக மக்களுக்கு பயப்பீதியுடனாக்குகின்ற செயற்பாடுகளுக்கு நாம் இடமளிக்கக்கூடாது.

பிந்திக் கிடைத்த செய்தியில் கனடாவில் மெடிக்காகோ நிறுவன அதிகாரி புறூஸ் கிளார்க் தெரிவிக்கையில், கொரோனா வைரசுக்கெதிரான தடுப்பூசியைக் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாகவும் அதனைப் பயன்படுத்துவதற்கான ஏப்.டி.ஏ என்னும் நிறுவனத்தின் அனுமதியை காத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

மெடிக்காகோ நிறுவனம் உயிருள்ள வைரசுவை தங்களது ஆய்வில் பயன்படுத்தா விடினும் இதற்காக தாவரங்களைப் புதிய முறையில் பயன்படுத்தி இந்த தடுப்பூசியைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். மண்ணில் வாழும் அக்றோபக்ரீறிய த்தினுள் செலுத்தப்பட்ட இவ் வைரசுவின் பரம்பரையலகுகள் அக்றோபக்ரீறியத்தை தாவரங்களுக்குள் செலுத்துவதன் மூலம் தடுப்பூசியை உருவாக்கியுள் ளனர்.

இதில் புகையிலைத் தாவரங்களை இவ்வாறு தடுப்பூசியைப் பெற பயன்படுத்துகின்ற னர் என அறிய முடிகின்றது.

இதற்கும் மேலாக இத்தாலி நாடும் தற்போது தங்களது உயிரியல் ஆய்வு நிறுவனத்தில் கொரோனா 19 வைரசுவிற்கு தடுப்பூசியினை கண்டுபிடித்திருப்பதாக கூறியிருக்கின்றார்கள். இவ்வாறான தடுப்பூசிகள் உரிய அனுமதி கிடைத்தால் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் பாவனைக்கு வந்துவிடும் என்கின்றார்கள். உலக நாடுகளில் விஞ்ஞான தொழில்நுட்பம் அதிகளவில் இவ்வாறான விடயங்களை உலக மக்களுக்கு கொடுப்பதற்காக பயன்படுத்தப்படுவது வரவேற்கத்தக்கது. எவ்வளவிற்கு பயப் பீதியிருந்தாலும் தடுப்பூசி கண்டுபிடித்திருப்பதென்பது ஆறுதலான செய்தியாகவே இருக்கின்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 219




கொரோனா வைரசு தொற்றுதலுக்குள்ளான நாடுகள்

விவசாயத்தில் எம்மை மிரட்டும் செய்தியாக வெட்டுக்கிளிகளின் தாக்கம் அதிகரித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் இதனது எண்ணிக்கை எதிர்பார்த்ததை விட அதிகளவில் காணப்படுவதாகவும் இவற்றினாலான சேதம் மிக அதிகம் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

ஆபிரிக்க நாடுகளைத் தாண்டி தற்போது பாகிஸ்தானிலும் இவ்வாறான வெட்டுக்கிளிகளின் தாக்கம் அதிகரித்திருப்பதாகவும் இவற்றின் எண்ணிக்கை' இங்கே கூடினால் நாமும் அதிகளவில் இடர்ப்பட வாய்ப்புக்கள் உண்டு. இவ்வாறான வெட்டுக்கிளிகளை அதிக எண்ணிக்கையில் அவதானித்தால் இது பற்றி விவசாயத் துறைக்கு அறிவிக்க வேண்டும்.

கண்காணிப்பு பொறிமுறை பலமாக இருந்தால் இவ்வாறான வலிந்துவரும் பீடைப் பிரச்சினைகளை இலகுவில் கையாளமுடியும். பொதுமக்களாக சமூக அக்கறையுடன் இவற்றை கவனித்து உரியவர்களிடம் தெரிவிப்பது அனைவரினதும் கடமையாகும்.

## கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில்

# மக்களே! அச்சம் வேண்டாம்

### யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இத்தாலியிலிருந்து வருகை தந்த ஒருவரின் மனைவி தலைச் சுற்று காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வந்திருந்தார்.

எனினும் வைத்தியசாலையிலிருந்தவர்கள் கொரோனா வைரஸ் தொற்றாக இருக்கலாம் என்ற அச்சத்தில் பீதியடைந்த போதிலும் மருத்துவ பரிசோதனையின் போது அவருக்கு அவ்வாறான எந்தவொரு சான்றும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய பின்னர் அவருக்கு உரிய சிகிச்சையளிக்கப்பட்டு அவர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார் எனவும் வடக்கில் கொரோனா வைரஸ் தொற்றுவதற்குரிய சாத்தியங்கள் மிகக் குறைவு எனவும் மக்கள் பீதியடையத் தேவையில்லை.

கொரோனா தொற்றுள்ளவர் ஒருவருடன் நெருக்கமாகப் பழகும் போதே தொற்று ஏற்படுவதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

எனவே வடக்கினை பொறுத்த வரைக்கும் அவ்வாறு இல்லை. ஒருவருக்குக்கூட இது வரை கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை.

எனவே வடக்கு மக்கள் கொரோனா தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை.

தேவையற்ற விதத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்யவோ அல்லது பீதியடையவோ தேவையில்லை.

எனவே இது தொடர்பில் வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் போதிய



எவு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவ்வாறு யாராவது இனங்காணப்பட்டு அதற்குரிய சிகிச்சை அளிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் மத்திய அரசாங்கத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

எனவே கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் வடக்கு மக்கள் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை எனவும் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார். (இ-7)

## ஹெரோயினுடன் 7 பாக்.பிரஜைகள் கைது

(கொழும்பு)

உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் ஒன்றிலிருந்து ஒரு தொகை ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளதாக போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் ஒன்றிலிருந்தே 75 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து குறித்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பாகிஸ்தான் பிரஜைகளை கைது செய்துள்ளதுடன் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மேற்கொண்டுள்ளது. (ஜ)

## கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் பல்கலைக்கழகங்களுக்கும் பூட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களையும் மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று சனிக்கிழமை முதல் 2 வாரத்திற்கு அனைத்து பல்கலைக்கழகங்களையும் மூட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தைக் குறைக்கும் நடவடிக்கையாக பாடசாலைகளை மூடுவதாக கல்வி அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்தது.

அந்தவகையில், நேற்று முதல் எதிர்வரும் ஏப்ரல் 20ஆம் திகதி வரை பாடசாலைகளை மூடுவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்தது.

அதேவேளை, அரச பாடசாலைகளின் விடுமுறைக்கமைய மேல் மாகாணத்தில் உள்ள சகல முன்பள்ளிகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மாகாண கல்வி திணைக்களம் அறிவித்தது.

அதன்படி, அனைத்து தனியார், மாகாண சபைக்கு உட்பட்ட, சர்வதேச மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றை மூடுவதற்கும் தீர்மானித்துள்ளதாக அத்திணைக்களம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் மூட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## கொரோனா தாக்கம் குறித்து அறிவியுங்கள்

### விமல் கோரிக்கை; பொறுப்புடன் செயற்பட அறிவுறுத்து

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் எதிர் கொண்டுள்ள நெருக்கடி நிலைமையை கைத்தொழில் அமைச்சுக்கு அறிவிக்க அவசர தொலைபேசி சேவை அறிமுகம் செய்யப்பட்டது.

மும்மொழிகளிலும் உரிய சேவையை கைத்தொழிலாளர்கள் துரிதமாக பெற்றுக் கொள்ள முடியும் என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மருத்துவ கண்காணிப்பு நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்ட இலங்கையர்கள். எதிர்கொண்டுள்ள தேசிய பிரச்சினையின் பாரதூர தன்மையினை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

முறையற்ற விதத்தில் செயற்பட்டால் அரசாங்கமும் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனவும் எச்சரித்தார்.

கைத்தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பெரும்பாலானோர் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி கைத் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்கள் சீனாவில் இருந்தே அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. மேலதிகள் தேவைகளுக்காக பிற நாடுகளில் இருந்து மூலப் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பெரும்பாலான நாடுகள் தங்களின் நாடுகளில் இருந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயற்பாடுகளை இடைநிறுத்தம் செய்துள்ளது. இதன் காரணமாக உள்ளூர் உற்பத்தியாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மூலப்பொருளை பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள உள்ளூர் கைத்தொழிலாளர்கள் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள். எனவே இவர்களின் நலன்கருதி அரசாங்கம் விசேட திட்டங்களை செயற்படுத்தியுள்ளது.

இதற்காக 011 314 4416 என்ற தொலைபேசி சேவை அறிமுகம் செய்யப்பட்டது.

இத்தொலைபேசி சேவை ஊடாக கைத்தொழிலாளர்கள் மும்மொழியிலும் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சேகரிக்கப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

கொரோனா வைரஸ் நோய் பாதிக்கப்பட்டுள்ள தென்கொரியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்து தற்போது மருத்துவ கண்காணிப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு சிலரது செயற்பாடுகள் வெறுக்கத்தக்கது.

தேசிய பிரச்சினையை கருத்திற்கொண்டு இவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். நாடு திரும்பியவுடன் இவர்களை அவரவர் வீடுகளுக்கு அனுப்பாமல் மருத்துவ நடவடிக்கைகளுக்கு ஏன் உட்படுத்துகின்றோம் என்ற காரணத்தையும் புரிந்துகொள்ள வேண்டும்.

நெருக்கடியான நிலையில் மருத்துவ கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் இதர வசதிகளை கோருவது பொறுத்தமற்றதாகும்.

இராணுவத்தினரது பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மெத்தைகளை இராணுவத் தளபதி இவர்களின் பாவனைகளுக்காக எவ்வித கோரிக்கைகளுமின்றி தன்னிச்சையாகவே வழங்கியுள்ளார்.

பிற நாடுகளில் இவ்வாறான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியாது.

இவர்கள் எவரும் பிற நாடுகளை சேர்ந்தவர்கள் அல்ல, இலங்கைப் பிரஜைகள். எனவே பொறுப்புடன் அனைத்து மக்களின் பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 | 140 |
| தக்காளி | 80 | 70 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 150 | 200 | 180 | 240 |
| பூசணி | 80 | 80 | 80 | 60 |
| புடோல் | 120 | 140 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 200 | 120 | 180 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 100 |
| பயற்றங்காய் | 80 | 50 | 100 | 60 |
| லீக்ஸ் | 140 | 150 | 200 | 200 |
| பீற்றூட் | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 100 | 150 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | — | 50 |
| கீரை -1பிடி | 30 | 30 | 50 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 65 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 140 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 140 | 160 |
| முள்ளங்கி | 30 | 40 | — | 60 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | 80 |

# தமிழ் தேசிய சைவ மக்கள் கட்சி வேட்பு மனுத்தாக்கல்



(குருமன்காடு).

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியில் சுயேட்சையாக போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசிய சைவ மக்கள் கட்சி வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளது.

குறித்த வேட்புமனு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று கட்சியின் வேட்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்டது. வேட்புமனுத் தாக்கல் செய்த பின் மாவட்ட செயலக முன்றலில் உள்ள பண்டார வன்னியன் நினைவுச் சிலைக்கு சென்ற வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் பண்டாரவன்னியனின் சிலைக்கு பொன்னாடை போர்த்தி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதேவேளை, மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவையின் ஆதரவுடன் சைவ மக்களின் உரிமைகளை முன்னிறுத்தி குறித்த கட்சி தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்களை மூடுமாறு உத்தரவு

(நெளுக்குளம்)

வவுனியா நகர்ப்பகுதியில் அமைந்துள்ள அனைத்து தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் மாணவர்கள், இளைஞர்கள் கூடக் கூடிய கல்விசார் செயற்பாட்டு இடங்களை மூடுமாறும் விளையாட்டு நிகழ்வுகளை நிறுத்துமாறும் வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வடமாகாணத்தில் அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் மூடுமாறு வடமாகாண ஆளுநரும் உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் அது தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

எனவே குறித்த உத்தரவினை மீறி எவரேனும் கல்வி செயற்பாடுகளை மேற்கொள்வார்களேயானால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (9-299)




# வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(கிளிநொச்சி)

நாட்டின் பல்வேறு இடங்களிலும் பல அபிவிருத்திகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல உள்ளூர் வீதிகள் புனரமைப்பு செய்வதற்காக வீதி அபிவிருத்தி நிறுவனமான மகா (MAGA) நிறுவனம் ஒப்பந்தமாகியுள்ள நிலையில் அதன் ஆரம்பகட்ட வேலைகள் பல இடங்களில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்று முன் தினம் கண்டாவளை பிரதேசத்திற் குட்பட்ட சில கிராமங்களின் உள்ளூர் வீதிகளை அக் கிராம மக்களுடன் சேர்ந்து மகா நிறுவன காரர்கள் அவதானித்து வீதி புனரமைப்பு தொடர்பாக கலந்தாலோசித்திருந்தனர். (9)

# முல்லையில் வனஜீவராசிகள் தொல்லை அதிகரிப்பு

## சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசமந்தம் என பொதுமக்கள் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனஜீவராசிகளால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற போதும் குறித்த விடயங்களோடு தொடர்புடைய வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் அசமந்தப் போக்கு காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதற்காக முல்லைத்தீவு மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டு யானை தொல்லை, கிராமங்களுக்குள் செல்லும் முதலைகள், குளவிக்கூடுகள், போன்ற பல்வேறு விடயங்கள் மக்களுக்கு தொல்லை கொடுத்து வரும் வேளைகளில் வனஜீவராசிகள் திணைக்களத்தினை தொடர்பு கொண்டு அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்வதில் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பனிக்கன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்தில் சுமார் ஒரு மாதங்களுக்கு மேலாக குளவிக்கூடு ஒன்று கட்டப்பட்டுள்ள நிலையில் குறித்த குளவி மாணவர்களைத் தாக்கிய நிலையிலும் குறித்த திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு இன்று வரை அது தொடர்பிலான எந்தஒரு நடவடிக்கையும் குறித்த திணைக்களம் எடுக்கவில்லை என பாடசாலை பெற்றோர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதேபோன்று மாங்குளம் அஞ்சல் அலுவலகத்துக்கு ஊழியர்கள் சென்றபோது மாங்குளம் அஞ்சல் அலுவலக வளாகத்தின் நுழைவாயிலில் குளவிக்கூடு ஒன்று கட்டப்பட்டு அதன் காரணமாக அஞ்சல் அலுவலகத்துக்கு செல்லமுடியாத நிலையில் அலுவலக ஊழியர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்ததோடு அலுவலகத்துக்கு சென்ற மக்களும் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்த போதும் குறித்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எனவே குறித்த விடயங்களை கருத்தில் எடுத்து வனஜீவராசிகளால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வரும் மக்களுக்கு தீர்வு பெற்று கொடுக்க சம்பந்தப்பட்ட திணைக்களம் விரைந்து சேவையாற்ற வேண்டும் எனவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-281)

# துப்பாக்கி ரவைகள் மீட்பு


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு-முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூதன்வயல் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி செயற்பாடு இடம் பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, குறித்த பகுதியில் சோதனை நடத்திய பொலிஸார் வீடு ஒன்றிலிருந்து ஒரு தொகையான துப்பாக்கி ரவைகளை கைப்பற்றியுள்ளனர். கடந்த வியாழக்கிழமை குறித்த வீட்டினுள் சோதனையிடுவதற்காக பொலிஸார் சென்ற வேளை வீட்டிலிருந்த நபர் ஒருவர் தப்பித்து ஓடியுள்ளார். இதனால் சந்தேகம் அடைந்த பொலிஸார் குறித்த வீட்டில் தீவிர சோதனை நடத்தியிருந்தனர். அப்போது அங்கிருந்து ஒரு தொகையான ரி-56 ரக துப்பாக்கி ரவைகளை கைப்பற்றியுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (9)

# சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிப்பு

(நெளுக்குளம்)

ஈச்சங்குளம் பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் முதிரைமர குற்றிகளை கடத்திச் சென்ற ஒருவரை கைது செய்துள்ளதாக புளியங்குளம் விசேட அதிரடி படையினர் தெரிவித்துள்ளனர். இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,



நேற்று அதிகாலை 4 மணியளவில் ஈச்சங்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி சட்ட விரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலிற்கமைய அப்பகுதிக்கு சென்ற புளியங்குளம் விசேட அதிரடிப் படையினர் மற்றும் வனவளத் திணைக்களத்தினர் சாந்தசோலை பகுதியில் வைத்து இம் மரக்கடத்தல் நடவடிக்கையை முறியடித்துள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த மரக்கடத்தலில் ஒருவர் கைது செய்யபட்டுள்ளதுடன் டாட்டா ரக வாகனம் ஒன்றும் விசேட அதிரடி படையினரால் கைப்பற்றப் பட்டது. கைது செய்யப்பட்டவர் மற்றும் டாட்டா ரக வாகனம், 15 மரக்குற்றிகள் அனைத்தும் வன வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# ஐஸ் போதைப்பொருளுடன் முல்லையில் ஒருவர் கைது


(நெளுக்குளம்)

முல்லைத்தீவு செம்மலை பகுதியில் ஐஸ் போதைப்பொருளை வீட்டில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரை விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுக் காலை முல்லைத்தீவு விசேட அதிரடி படையினரிற்கு கிடைத்த இரகசிய தகவலொன்றின் அடிப்படையில் செம்மலை பகுதியிலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 910 கிராம் ஐஸ் போதைப்பொருளையும் செம்மலை பகுதியில் வசிக்கும் 42 வயதுடையவரையும் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர். (9-299)

# மின்னியலாளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு





(மன்னார்)

மன்னார் மாவட்ட மின்னியலாளர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பான தேசிய விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன் தினம் மன்னார் நகரசபை மண்டபத்தில் மேலதிக அரச அதிபர் கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் மன்னார் மாவட்டத்திலுள்ள 350 இற்கும் மேற்பட்ட மின்னியலாளர்கள் கலந்து கொண்டார்கள். மேலும், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை சார்பில் தேசிய தொழிற் பயிற்சி தகைமைகள் (NVQ) தொடர்பக நிலைய பொறுப்பதிகாரி சிவபாலன், தேசிய பயிலுநர் பயிற்சி அதிகாரசபை சார்பில் முகாமைத்துவ உதவியாளர் செல்வி. அம்பிகாதேவி, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பத்மராசா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இங்கு உரையாற்றிய மேலதிக அரச அதிபர் கே.எஸ். வசந்தகுமார், பாதுகாப்பற்ற மின்சார பாவனையால் அதிகளவு மின்சார இறப்புக்கள் ஏற்படுகின்றன.

உலகநாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் அதிகளவான மின்சார இறப்புக்கள் நடந்துள்ளன. மின்னியலாளர்கள் தொழில் ரீதியான உரிமத்தை பெறும் போது, உள்நாட்டிலும் சர்வ தேச நாடுகளிலும் சிறந்த, தகுதி யான ஒரு மின்னியலாளராக அங்கீகாரம் கிடைக்கும் எனத் தெரிவித்தார். (9)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அதிகரித்துள்ள

# மர அறுவைச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துங்கள்

### ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்பிரிவில், அமைந்துள்ள அரச மரக் கூட்டுத்தாபனத்தினர் அதிகளவான மரங்களை அறுத்து வெளிமிடங்களுக்கு விற்பனை செய்வது தொடர்பில், நேற்று முன்தினம் இடம்பெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மார்ச் மாத அமர்வில் பேசப்பட்டது.

அத்துடன் குறித்த செயற்பாட்டினைக் கட்டுப்படுத்தக்கோரி ஜனாதிபதிக்குக் கோரிக்கைக் கடிதம் ஒன்றும் சபையால் அனுப்பி வைப்பதெனவும் குறித்த அமர்வில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் புதுக்குடியிருப்புப் பிரதேசசபைத் தவிசாளர் செ.பிரேமகாந் கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அம்பகாமம், மேழிவனம் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காடுகளில் தேக்கு மரங்கள்அழிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இது மரக்கூட்டுத்தாபனம் மற்றும் வனவளத் திணைக்களம் என்பவற்றின் சட்ட விதிமுறைக்கு அமைவான ஒரு வழியாக இருக்கலாம்.

ஆனாலும் இத்தகைய செயற்பாடுகளால் எமது மக்களினுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

தற்போது முறையான பருவ மழை வீழ்ச்சி கிடைப்பதில்லை. பருவ மழை வீழ்ச்சியானது பொய்த்துப் போகின்ற வகையில் இருக்கின்றது.

குறிப்பாக விவசாயிகளுக்கு உரிய விளைச்சல் கிடைக்காமை உள்ளிட்ட பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன.

எனவே இப்பிரச்சினைக்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தருமாறு ஜனாதிபதிக்குக் கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி வைப்பதென சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (9)

# மிதிவெடி அகற்றுநருக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பச்சிளைப்பள்ளி பகுதியில் இயங்கி வரும், உள்ளூர் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான சார்ப் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் மிதிவெடி அகற்றுநருக்கான வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆகவே வேலைவாய்ப்பற்று இருக்கும், வேலை தேடிக்கொண்டு இருக்கும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தினைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் எதிர் வரும் 15,16,17 ஆகிய தினங்களில் காலை 8 மணியளவில் பளைப் பகுதியில் அமைந்திருக்கும் சார்ப் நிறுவனத்துக்கு வருகை தருமாறு சார்ப் நிறுவன திட்ட முகாமையாளர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி கப்டன் பிரபாத் அறிவித்துள்ளார். (9)

# வவுனியாவிலுள்ள 87 குளங்களில் 13 இலட்சம் மீன்குஞ்சுகள் விடப்பட்டன

(நெளுக்குளம்)

வவுனியாவில் இந்த வருடம் முதல் இரண்டு மாதங்களில் 13 இலட்சத்து 32 ஆயிரத்து 500 மீன் குஞ்சுகள் குளங்களுக்கு விடப்பட்டுள்ளதாக தேசிய நீர் உயிரின அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட பொறுப்பதிகாரியோ.நிசாந்தன் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்பின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், வவுனியாவில் பருவ கால குளங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றில் 87 குளங்களுக்குள் மீன் குஞ்சுகள் விடப்பட்டன. 3.33 மில்லியன் ரூபா பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 13 இலட்சத்து 32 ஆயிரத்து 500 மீன் குஞ்சுகள் இவ்வாறு குளங்களுக்குள் விடப்பட்டுள்ளன.

அதேவேளை தொடர்ந்தும் நன்னீர் மீன் வளர்ப்பிற்கான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (9-299)




# விதை நெல் அறிமுகமும் விற்பனையும்



(நெளுக்குளம்)


வவுனியா விதை உற்பத்தியாளர் சம்மேளனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல் அறிமுக நிகழ்வும் விற்பனையும் வவுனியா மாவட்ட கமக்காரர் ஒழுங்கமைப்பு சம்மேளன அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் காணப்படும் விதை நெல் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு வவுனியா விவசாய ஆர்வலர்கள் மற்றும் வவுனியா மாவட்ட விதை உற்பத்திப் பணிப்பாளர் தலைமையில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் உருவாக்கப்பட்ட வவுனியா விதை உற்பத்தியாளர் சம்மேளனமானது 150 ஏக்கர் வயல் நிலத்தில் விதை நெல் உற்பத்தியை மேற்கொண்டிருந்தது. இதன் பயனாக 5 மாத காலத்தில் வவுனியா விவசாயிகளுக்கு விதை நெல்லை விநியோகம் செய்யும் வேலைத்திட்டத்தினை மேற்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் விதை உற்பத்தியாளர் சம்மேளனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல் அறிமுக நிகழ்வும் விற்பனையும் இடம் பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் சம்மேளனத்தின் தலைவர் பத்மநாதன், மகாவலி அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள், வவுனியா மாவட்ட விதை உற்பத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ். யோகேஸ்வரன், வவுனியா மாவட்ட விவசாயப் பணிப்பாளர் உட்பட சம்மேளனத்தின் உறுப்பினர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

# விவாதப் போட்டியில் முதலிடம்



(குருமன்காடு)

கலாசார அலுவலகள் திணைக்களத்தின் அனுசரணையில் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட விவாதப் போட்டியில் வவுனியா அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம் முதல் நிலை பெற்றுள்ளது. வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த போட்டிகள் கடந்த புதன் கிழமை நடைபெற்றன.

இதில் செட்டிகுளம் கோட்டத்திற்குட்பட்ட பல பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன. தரம் 11 மற்றும் உயர்தர மாணவர்களை உள்ளடக்கி குறித்த விவாதப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் வவுனியா அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம் முதலாம் இடத்தையும், செட்டிகுளம் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் அல் இக்பால் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன.

அத்துடன், வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் என்பன விரைவில் வழங்கப்படும் என பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (9-250)

# பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட உருத்திரபுரத்தையும் கனகபுரத்தையும் இணைக்கும் இணைப்பு வீதியும் அதற்கான பாலமும் உரிய முறையில் அமைக்கப்படாமல் தற்போது சேதமடைந்து காணப்படுவதனால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி உருத்திரபுரம், சிவநகர், ஜெயந்திநகர் உள்ளிட்ட கிராமங்களையும் கனகபுரம், செல்வாநகர், புதுமுறிப்பு உள்ளிட்ட கிராமங்களையும் இணைக்கும் இணைப்பு வீதி கடந்த 2012 ஆம் ஆண்டு கொங்கிறீட் வீதியாகப் புனரமைக்கப்பட்டபோதும் இவ்வீதியினை குறுக்கறுத்துச்செல்லும் கந்தன்குளம் ஆற்றுக்கான பாலம் உரிய முறையில் அமைக்கப்படாமல் சிறிய குழாய்களை கொண்டு மதகு போன்ற பாலமே அமைக்கப்பட்டிருந்தது.

வீதி புனரமைக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் பாலத்தின் ஒரு பகுதி உடைந்த நிலையில் காணப்பட்டதுடன், இதனூடாக ஆபத்தான நிலையில் பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் தமது பயணங்களை மேற்கொண்டு வந்தனர்.

கடந்த ஆண்டின் இறுதியில் பெய்த மழை வெள்ளம் காரணமாக எஞ்சியிருந்த பாலமும் உடைந்துள்ள நிலையில் குறித்த வீதியூடான போக்குவரத்துக்கள் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனால் மேற்படி கிராமங்களிலிருந்து கனகபுரம் ம.வி., உருத்திரபுரம் பாடசாலை, கிளிநொச்சி இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும் பல்வேறு தேவைகள் கருதி பயணிக்கும் பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் நீண்டதூரம் பயணித்து மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தி போக்குவரத்துக்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே குறித்த வீதியில் சேதமடைந்துள்ள பாலத்தினை புனரமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# 'விதை' நூல் வெளியீடு




(கிளிநொச்சி)

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணியாளரும் பெண் படைப்பாளியுமாகிய கங்காஜினி (ந.ப.கங்கா) எழுதிய "விதை" கவிதை நூலின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. "நதியோர நாணல்கள்" இலக்கிய அமைப்பின் தலைவர் வ.ஜசிந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலினை வெளியிட்டு வைத்தார். (9)



# பாரதம்

## கொரோனா அச்சம் வேண்டாம்
### மோடி வேண்டுகோள்



(சென்னை)

கொரோனா வைரஸ் குறித்து மக்கள் பீதியடைய வேண்டாம் என பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்தார்.

சீனாவின் வுஹான் நகரில் ஆரம்பமாகிய கொரோனோ வைரஸ், சீனா மட்டுமின்றி உலகம் முழுவதும் 117 நாடுகளில் பரவியுள்ளது. இதுவரை 4,635 பேர் உயிரிழந்துள்ளதுடன் உலகம் முழுவதும் ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 380 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.


இதேவேளை, இந்தியாவிலும் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், கொரோனா வைரஸ் பரவி வருவதால் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது எனவும் மக்கள் யாரும் பீதியடையத் தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

அத்துடன், முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்வதாகவும் இதுபோல் மத்திய அமைச்சர்கள் யாரும் வெளிநாடு செல்ல வேண்டாம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், மக்களும் அவசியமற்ற பயணங்களைத் தவிர்க்கவும். பெருமளவில் கூட்டம் கூடுவதைத் தவிர்க்கவும் கொரோனா பரவலைத் தடுப்பதன் மூலம் அனைவரது பாதுகாப்பையும் நாம் உறுதி செய்ய முடியும் என பதிவிட்டுள்ளார். (ஜ-2)

## இத்தாலியை புரட்டியெ...
## இருபத்து நான்கு மணித்தி...



(ரோம்)

இத்தாலியில் கொரோனா தாக்குதலுக்கு கடந்த 24 மணி நேரத்தில் 189 பேர் பலியாகியுள்ளனர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1016 ஆக அதிகரித்துள்ளது. சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 120 இற்கும் அதிகமான நாடுகளுக்கு பரவியுள்ளது.

இந்த வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் 4 ஆயிரத்து 600 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 30 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு வைர...

. இதற்கிடையில், சீனாவுக்கு அடுத்தபடிய... இத்தாலியில் தான் கொரோனா கோரத்தா... இத்தாலியின் அனைத்து மாகாணங்களிலும் ... கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இத்தாலியை உலுக்கி எடுத்...

## உலகின் கடைசி வெள்ளை ஒட்டகச்சிவிங்கியை குட்டியுடன் கொன்ற வேட்டைக்காரர்கள்

(நைரோபி)


உலகின் கடைசி வெள்ளை நிற ஒரு பெண் ஒட்டகச்சிவிங்கியையும் அதன் குட்டியையும் .வேட்டைக்காரர்கள் அண்மையில் வேட்டையாடிக் கொன்றது தற்போது தெரிய வந்துள்ளது.

ஆபிரிக்க காடுகளில் அதிகளவில் ஒட்டகச்சிவிங்கிகள் வாழ்ந்து வருகின்றன. இதில் கென்யா நாட்டின் கரிசா காடுகளில் அரிதிலும் அரிதான வெள்ளை நிற ஒட்டகச்சிவிங்கிகள் வாழ்ந்து வந்தது கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில், அதில் ஒரு பெண் ஒட்டகச்சிவிங்கியையும், அதன் குட்டியையும் வேட்டைக்காரர்கள் அண்மையில் வேட்டையாடிக் கொன்றது தற்போது தெரிய வந்துள்ளது.

இது குறித்து கென்யா வன விலங்கு பாதுகாப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகின் அரியவகை வெள்ளை நிற பெண் ஒட்டகச்சிவிங்கி மற்றும் அதன் குட்டியின் எலும்புக் கூடுகள் கரிசா பகுதியில் அண்மையில் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன்மூலம் தற்போது அந்தப் பகுதியில் ஒரேயொரு வெள்ளை நிற ஆண் ஒட்டகச்சிவிங்கி மட்டுமே உயிரோடு இருப்பதாகவும் அதனைப் பாதுகாக்க



அனைத்துவிதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. ஒட்டகச்சிவிங்கிகள் அதன் தோலுக்காகவும் கறிக்காகவும் வேட்டைக்காரர்களால் கொல்லப்படுகிறது.

அந்த வகையில் கடந்த 30 ஆண்டுகளில் ஆபிரிக்கக் காடுகளில் மட்டும் 40 சதவீத ஒட்டகச்சிவிங்கிகள் வேட்டையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)


## ரோமில் 900...
## ஞாயிறு ஆ...



(ரோம்)

கொரோனா வைரஸிற்கு எதிரான போராட்டத்தின் விளைவாக ரோம் நகரில் உள்ள அனைத்து கிறிஸ்தவ தேவா...

...யை... அங்... தாக...



## கொரோனாவால் கூட்...

(ஆம்ஸ்டர்டாம்)

கொரோனா வைரஸ் குறித்து ஆராய்ச்சியாளர்களால் நடத்தப்படவிருந்த கூட்டம் கொரோனா அச்சம் காரணமாக இரத்துச் செய்யப்பட்டது.

சீனாவின் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 120 இற்கும் அதிகமான நாடுகளுக்கு பரவியுள்ளது. இந்த வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 4 ஆயிரத்து 600 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஒரு இலட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் பரவியுள்ளது.

இந்தக் கொரோனா வைரஸ் தாக்குதலை குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்க அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் தீவிர முயற்சி மே... கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில், மூன்... ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்... தேச நிடோவைரஸ் சிம்போசி... எனப்படும் விலங்குகள் மற்று... மனிதர்களுக்கு பரவும் வைர... தாக்குதல்கள் குறித்... (கொரோனா உட்பட) கூட்ட... கள் உலகின் ஏதேனும் ஒ...

# வெளிநாடு

## யெடுக்கும் கொரோனா
## த்தியாலத்தில் 189 பேர் பலி!



ழந்துள்ளனர். மேலும், ஒரு இலட்சத்து
ாருக்கு வைரஸ் பரவியுள்ளது.
அடுத்தபடியாக ஐரோப்பிய நாடான
கோரத்தாண்டவம் ஆடி வருகிறது.
ணங்களிலும் கொரோனா பரவியிருப்பது

உலுக்கி எடுத்துவரும் கொரோனாவுக்கு

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 189 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 1016 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 15 ஆயிரத்து 113 பேருக்கு வைரஸ் பரவியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸ் தாக்குதல் காரணமாக இத்தாலி முழுவதும் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டு மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வர பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## 900 தேவாலயங்கள் மூடப்பட்டன
## ஆராதனைகளும் இரத்து



லயங்களும் மூடப்பட்டன.

ரான
கரில்
தவா

அத்தோடு ஞாயிறு ஆராதனைகளும் அங்கு இரத்துச்செய்யப்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவித்தன.

இத்தாலியில் தற்போது நிலவும் சூழ்நிலையை கருத்திற்கொண்டு இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்தாலியின் கர்தினால் ஏஞ்சலோ டி டொனடிஸ் தேவாலயம் மற்றும் ரோமின் 900 கிறிஸ்தவ வேோலயங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவித்தன.

அதேவேளை மக்கள் நெருக்கமாக இருக்கும் இடங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு அந்நாட்டு அரசு தெரிவித்ததை அடுத்து , ஞாயிறு ஆராதனைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கூட்டம் ரத்து

விர முயற்சி மேற்
கின்றனர்.
டயில், மூன்று
ஒருமுறை சர்வ
வரஸ் சிம்போசிசம்
லங்குகள் மற்றும்
பரவும் வைரஸ்
குறித்து
உட்பட) கூட்டங்
ஏதேனும் ஒரு

நாட்டில் நடைபெறுவது வழக்கம்.

இந்தக் கூட்டத்தில் வைரஸ் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடும் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளையும் ஆய்வு முடிவுகளையும் வெளியிடுவர்.

இந்நிலையில், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அறிவியல் ஆராய்ச்சியாளர்களின் கூட்டம் இந்த ஆண்டு மே 10 முதல் 14 ஆம் திகதி வரை நெதர்லாந்து நாட்டில் நடைபெறுவதாக இருந்தது.

ஆனால், தற்போது உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவி வருவதால் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அச்சம் தெரிவித்தனர்.

இதையடுத்து, வைரஸ் தொடர்பான ஆய்வுக்கூட்டம் அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்படுவதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

கொரோனா உட்பட அனைத்துவகை வைரஸ் தொடர்பாக நடைபெற இருந்த ஆராய்ச்சியாளர்கள் கூட்டம் கொரோனா வைரஸ் காரணமாகவே இரத்துச் செய்யப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-2)

## கொரோனா வைரஸ் பற்றிய செய்தித்துளிகள்

### அல்ஜீரியா, ஆஸ்திரியாவில் கொரோனாவுக்கு முதல் பலி



### கொரோனா கட்டுப்படுத்தக்கூடியது; உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு



### கொரோனா; ஒரு நாளைக்கு 10 கோடி முகமூடிகளை உற்பத்தி செய்யும் சீனா



### இங்கிலாந்தில் 10 ஆயிரம் பேருக்கு கொரோனா? தலைமை அறிவியல் ஆலோசகர் அதிர்ச்சித் தகவல்



### கொரோனா வைரஸ்; ஒரு வாழைப்பழத்துக்காக மோதிக்கொண்ட நூற்றுக்கணக்கான குரங்குகள்



# கொரோனாவிலிருந்து பாதுகாக்க இஞ்சி; ஆயுர்வேத மருந்தக கூட்டுத்தாபனம் திட்டம்

(கொழும்பு)

கொரோனா வைரஸில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்க சுதேசிய ஆயுர்வேத முறையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஆயுர்வேத மருந்தக கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

இந்நிலையில் இதற்குத் தேவையான இஞ்சியை சரியான வகையில் உலர்த்துவதற்கான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்குத் தயாராகி வருவதாகவும் அந்தக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்தது.

கொரோனா வைரஸிற்கு ஆயர்வேத சுதேசிய மருந்தக கூட்டுத்தாபனம் ரத்த கல்கய, புத்தராய கல்கய, நவரத்ன கல்கய, சீதாராமகுலி ஆகிய வற்றை பெருமளவில் சந்தைக்கு விநியோகித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் உற்பத்தியாளர்களிடமிருந்து உலர்த்தப்படாத இஞ்சியை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டது.

ஒரு கிலோ இஞ்சி 80 ரூபாவிற்கும் 90 ரூபாவிற்கும் இடைப்பட்ட விலைக்கு வழங்க விருப்பம் உள்ளோர் அது தொடர்பாக 011 285 0229 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்க முடியும் எனவும் மொத்தமாகவும் கொள்வனவு செய்யப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைக்க தீவிர முயற்சி

## ராஜித கூறுகிறார்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைப்பதற்கு தொடர்ந்தும் முயற்சித்து வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்கள் கட்சி, நிறம், சின்னம் என்று பாராது சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவளிக்கத் தயாராகவுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துடன், இணைந்து செயற்படினும் அவர்களுக்கு இடையிலும் பல முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.


கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த தரப்பினருக்கு பௌத்த மதகுருமார், துறைசார் நிபுணர்கள் உள்ளிட்டபலரின் ஆதரவு காணப்பட்டது.

தற்போதைய நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்கள் அரசாங்கத்திற்கு எதிரான சக்தியாக மாறத் தயாராகவுள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

இந்த அரசாங்கத்தால் தேர்தல் மேடை நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. அதற்குப் புறம்பாக மாறுபட்ட கோணத்திலேயே இந்த அரசாங்கம் பயணிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொரோனா வைரஸ் எதிரொலி

# தொழில்துறை பாதிப்புகள் தொடர்பில் விசேட குழு உருவாக்கம்- தினேஷ்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டின் தொழில் துறைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில், ஆராய்ந்து அவற்றைத் தடுக்கும் வகையில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான விசேடகுழு ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக நாட்டின் தொழில் துறைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து அவற்றை பாதுகாப்பது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சரும், தொழில் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தலைமையில் நிறுவனங்களில் தலைவர்கள் பங்கேற்ற விசேட பேச்சுவார்த்தையொன்று தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது கொரோனா வைரஸினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பிலும் அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, நாட்டைக் கொரோனா வைரஸிலிருந்து மீட்டெடுப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் மேற்படி நிறுவனங்களில் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது கொரோனா வைரஸ் காரணமாக எதிர்கொள்ளக் கூடிய சில நெருக்கடிகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டன. குறிப்பாக நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் மற்றும் நிறுவனங்களின் வருமானம் வெகுவாகக் குறைதல், ஊழியர்களுக்கு வழங்கப்படும் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொழில் பாதுகாப்பு, உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளுதல் என்பன தொடர்பில் ஆராயப்பட்டன.

உற்பத்தித்துறைக்கான பெரும்பாலான மூலப் பொருட்கள் சீனாவிலிருந்தே கொள்வனவு செய்யப்படுவதால் சிக்கல்கள் மேலும் உக்கிரமடையலாம் என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ஜ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## படித்ததும் பார்த்ததும்!

காசியில் ஒரு பண்டிதர் இருந்தார். மிகவும் படித்தவர். அதனால்தான் பண்டிதர். அவர் ஒரு நாள் ஏதோ ஒரு ஊருக்கு சென்றார். வழியில் மழை பெய்தது. சரி, மழை விடும் வரைக்கும் பக்கத்தில் எங்கேயாவது ஒதுங்கி இருந்து புறப்படுவோம் என்று நினைத்தார். பார்த்தார். அங்கே ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டுத் திண்ணையில் போய் அமர்ந்தார்.

அந்த வீட்டு மாடியில் ஒரு அம்மா குடியிருந்தார். அந்த சமயத்தில் தெருவில் சில பேர் ஒரு பிணத்தை தூக்கிச் சென்றனர். அதைப்பார்த்ததும் அந்த அம்மா, தன் அருகில் நின்ற ஒரு சிறுமியை அழைத்தார். இதோ பாரம்மா! இறந்து போனவர் எங்கே போகிறார்? சொர்க்கத்திற்கு போகின்றாரா? நரகத்திற்கு போகின்றாரா? என்று விசாரித்து வா என சொன்னார்.

உடனே சரி என்று சொல்லி அந்த சிறுமி வெளியே ஓடினாள். சிறிது நேரத்தில் மீண்டும் வந்தாள் அவர் சொர்க்கத்திற்கு போகிறார் என்று சொன்னாள்.

சிறிது நேரம் ஆனது. மழை ஓயவில்லை. பண்டிதர் இன்னும் அந்த திண்ணையில் தான் அமர்ந்திருந்தார். இந்த சமயத்தில் இன்னொரு பிணத்தை சில பேர் அந்த வழியால் தூக்கிச் சென்றனர். மாடியில் இருந்த அந்த அம்மா, மறுபடியும் அந்த சிறுமியை அழைத்தார்.

இதோ பாரும்மா! இப்போது தூக்கி செல்கிறார்களே இவர் எங்கே போகின்றார் என்பதையும் விசாரித்து வா! என்றார். அந்த சிறுமி மறுபடியும் வெளியே ஓடினாள். சிறிது நேரம் கழித்து திரும்ப வந்தாள்.

இவர் நரகத்திற்கு போகின்றார்! என்றாள். இது அனைத்தையும் அந்தப் பண்டிதர் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஒரே ஆச்சரியம்! குழப்பம்!

யோசித்துப் பார்த்தார். நானும் எவ்வளவோ சாஸ்திரம் எல்லாம் படித்துள்ளேன். இருந்தாலும் ஒருவர் இறந்த பிறகு எங்கே போகின்றார் என்பதை தெரிந்துகொள்ள முடியவில்லையே! ஆனால் இந்த சிறிய பெண் எங்கேயோ ஓடுகிறாள்! திரும்ப வருகிறாள்! எங்கே போகின்றார்கள் என்பதை விபரமாக சொல்கிறாள். அது எப்படி..? பண்டிதர் யோசிக்கின்றார். ஒன்றும் புரியவில்லை. சரி, நேரில் கேட்போம் என முடிவு செய்து மாடிக்கு சென்றார்.

அந்த அம்மா அவரை வரவேற்று என்ன வேண்டும் என கேட்கின்றார். ஒருத்தர் சொர்க்கத்திற்குப் போகின்றாரா? நரகத்திற்குப் போகின்றாரா? என்பதை அந்த சிறுமி எப்படி கண்டு பிடித்தாள்? என கேட்கிறார்.

உடனே அந்த சிறுமியே அவர் முன்பு வந்து நின்று விபரம் சொல்ல ஆரம்பிக்கிறாள். முதலில் ஒருத்தரை தூக்கி சென்றார்களே அவர் வாழ்ந்த இடம் எது என விசாரித்து அங்கே போனேன். அங்கே எல்லோரும் அழுதுகொண்டிருந்தார்கள்.

மகராசன் போய்விட்டாரே.. எவ்வளவோ நல்ல காரியம் செய்தார். தானதருமங்கள் செய்தார். அடுத்தவர்களுக்கு உதவியாக இருந்தார். அவர் போய்விட்டாரே எனச் சொல்லி அழுது கொண்டிருந்தார்கள். அதனால் அவர் சொர்க்கம் போகின்றார் என முடிவு செய்தேன்.

இரண்டாவதாக ஒருத்தர் உடலை தூக்கிச் சென்றார்களே அவர் வீட்டையும் தேடிச்சென்றேன். அங்கே எல்லோரும் சந்தோசமாக இருந்தார்கள். அயோக்கியன் தொலைந்தான்! எவ்வளவு அக்கிரமம் செய்து கொண்டிருந்தான். இனிமேல் நமக்கு கவலை இல்லை என சொல்லி எல்லோரும் சந்தோசப் பட்டுக் கொண்டிருந்தார்கள். அதனால் அவர் நரகத்திற்குப் போகின்றார் என முடிவு செய்தேன் என்றாள் சிறுமி.

இதைக் கேட்ட பிறகு தான் அந்தப் பண்டிதருக்கு தான் படித்த ஒரு விடயம் ஞாபகத்திற்கு வந்ததாம். அதாவது நல்ல காரியங்கள் செய்கிறவர்கள் நல்ல கதி அடைகிறார்கள். கெட்ட காரியங்கள் செய்கிறவர்கள் கெட்ட கதி அடைகிறார்கள்! என அவர் சாஸ்திரத்தில் படித்தது ஞாபகத்திற்கு வந்ததாம்.

எவ்வளவு படித்து என்ன பிரயோசனம்? படித்தது ஞாபகத்திற்கு வருவதற்கே ஒரு சிறிய பெண்ணின் உதவி தேவைப்படுவது போல ஆகிவிட்டதே! நரகத்திற்குச் சென்ற ஒரு ஆள் தன் பக்கத்தில் இருந்த இன்னொருவருடன் பேசிக்கொண்டிருந்தான்.

நான் இறந்த போது கூட எங்கள் ஊரில் பல பேர் கூடி நின்று அழுதார்கள். இருந்தாலும் கூட நான் சொர்க்கத்திற்குப் போகவில்லை. நரகத்திற்கு வந்துவிட்டேன் என்றான் அவன்.

அது எப்படி? என கேட்டான் பக்கத்தில் இருந்த ஆள்.

அழுதவங்க அத்தனைபேரும் எனக்குக் கடன் கொடுத்தவர்கள்! என்றான் இவன்.

# புதிய கொரோனா வைரஸ் (COVID - 19)

2019 ஆம் வருடத்தின் டிசெம்பர் 31 ஆம் நாள் முதல் முறையாக சீனாவின் "ஹூபேய்" பிராந்தியத்தில் "வுஹான்" நகரத்திலிருந்து அறிக்கையாகிய புதிய கொரோனா வைரஸ் நோய் இதுவரையில் சீனாவுக்கு மட்டுமன்றி முழு உலகத்துக்குமே அச்சுறுத்தலான விதத்தில் பரவிக் கொண்டிருக்கிறது.

தற்போது கண்டறிந்துள்ள விதத்தில் நோய் சுவாசம் மூலம் தொற்றுவதுடன் நோயாளியொருவருடன் கிட்டிய தொடர்பை கொண்டிருத்தல், நோய் வைரஸ் உடனான சளி, மூக்குச்சளி, உமிழ் நீர் போன்றவற்றின் மூலமும் உயிரற்றவைகளின் வெளிப்பரப்பு அல்லது உபகரணங்களைத் தொடுதல் மூலமும் முகம் மற்றும் கண் தொடுகை மூலமும் முகர்தல் மூலமும் உடலுக்கு எடுக்க முடியும்.

உலகளவில் COVID - 19 நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் முற்றிலும் குணப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நோயானது சாதாரண குளிர் காய்ச்சலிருந்து நியூமோனியா வரை முன்னேற்றம் அடையக்கூடும். சில நேரங்களில் இந்த நோயானது நோய் எதிர்ப்பு சக்தி குறைவான சில நோயாளிகளுக்கு நியூமோனியா மற்றும் சிறுநீரகம் போன்ற முக்கிய உறுப்புக்கள் பாதிப்படைகின்ற அபாயகரமான நிலைமைகளுக்கு வழிவகுக்கும்.

### ஆபத்து பிரிவினர்



- வயதான முதியோர்
- உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள்.
- நீரிழிவு மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் (நிர்ப்பீடனம் (Immunity) குறைந்தவர்கள்)
- மாற்று அவயவங்கள் (Organ Transplant) பொருத்தியவர்களில் தாக்கம் கூடிய (Chemotherapy) மருந்துகள் எடுப்பவர்கள்
- ஏற்கனவே சுவாச முறைமை (Respiratory System) சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்.
- கர்ப்பிணித்தாய்மார்கள்.

# நோய் பற்றி நீங்கள் அறிவீர்களா?

### கொரோனா வைரஸ் நோயின் நோய் அறிகுறிகள்

- ஆரம்ப நோய் அறிகுறிகள் சுவாசத் தொகுதி சார்பாக ஏற்படும்.
  - -காய்ச்சல்.
  - -இருமல்.
  - -மூச்செடுக்கும் கஷ்டத்தன்மை /மூச்சுவாங்குதல்.
  - -தொண்டையில் வேதனை.
  - -தலைவலி.
- தசை மற்றும் உடல் வேதனை.
- வயிற்றோட்டம் போன்ற உணவு ஜீரண முறைமை சார்பான நோய் அறிகுறிகளும் ஏற்பட முடியும்.

### கூடிய விரைவில் வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள்


- கடந்த இரண்டு வாரங்களான காலத்துள் இந்த நோயாளர்கள் (கொரோனா) நோய் அறிக்கையான பிரதேசத்துக்கு அல்லது வெளிநாட்டில் சுற்றுலா ஈடுபட்டிருந்தால்.
- கடுமையான காய்ச்சலுடன் சுவாச வழி சார்பான நோய் அறிகுறிகளை காட்டினால்.
- உங்களுக்கு மூச்சுவிடுதல் கஷ்டமான நிலை ஏற்பட்டால்.

நீங்கள் ஒருவரை வரவேற்கும் போது கை குலுக்கியோ கட்டி அணைத்தோ வரவேற்பதை தவிர்க்க வேண்டும்.

கண்கள், மூக்கு, வாய் மற்றும் முகத்தை அடிக்கடி தொடுவதை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

### நோயாளர் பின்பற்ற வேண்டிய அடிப்படை நடவடிக்கைகள்



- நன்றாக ஓய்வெடுத்தல்.
- திரவத்தன்மையான பானங்களை எடுத்தல்.
- காய்ச்சல் கட்டுப்பாட்டுக்காக பரசிற்றமோல் (Paracitamol) மட்டும் பாவித்தல் (அஸ்பிரின் போன்ற NSAID தொகுதியின் மருந்துகளைப் பாவனையிலிருந்து தவிர்க்கவும்.)

நீங்கள் சுவாச முறைமை சார்ந்த நோய் அறிகுறிகளால் வருந்தினால் மக்கள் கூடும் இடங்களுக்குப் போவதில் இருந்து தவிர்த்து இருக்கவும். பொருத்தமான சந்தர்ப்பத்தில் வைத்திய சிகிச்சைக்காக செல்லுதலும் அவசியமாகும்.

### கொரோனா வைரஸ் நோயிலிருந்து பாதுகாப்பதற்கான முறைகள்:



- அடிக்கடி கைகழுவவும் (சவர்க்காரம் பாவித்து ஓடும் நீரில் நன்றாகக் கழுவவும்)
  - -இருமலின் / தும்மலின் பின்
  - -முகம் தொடுகை செய்வதற்கு முன் / பின்
  - -உணவு தயார் செய்வதற்கு முன் / பின் மற்றும் இடைக்கிடை
  - -உணவு உண்பதற்கு முன் / பின்
  - -நோயாளியொருவருக்குப் பராமரிப்புச் செய்த தன் பின்
  - -பெரும்பான்மையாக மனிதர்கள் கூடும் இடங்களுக்கு போய் வந்ததன் பின்
  - -மிருகங்களைப் பிடித்ததன் பின்
- இருமலில் / தும்மலில்
  - -அகற்றிப் போடக் கூடிய முகமூடி (Mask) பாவித்தல் மற்றும் அதனைக் கூடிய விரைவில் முறையாக அகற்றுதல் அல்லது
  - -உங்களுடைய முழங்கையை மடித்து முகத்தை மூடுதல்
- மக்கள் கூடும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில்
  - -இற்றைப்படுத்தியவையான (Updated) சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு ஏற்பமட்டும் முகம் மூடி அணிதல்.
  - -காய்ச்சல், இருமல், குளிர் (Cold) போன்ற நோய் அறிகுறிகள் உள்ள நோயாளிகளுடன் அண்மித்தலை தவிர்த்தல்.

# கொரோனா கட்டுப்படுத்தக் கூடியது

## உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு



(ஜெனீவா)

உலகம் முழுவதும் 'கோவிட் -19' என்ற கொரோனா உயிர்க் கொல்லி நோய் பரவி வருகிறது. நோய் தடுப்பு முறைகளை உலக சுகாதார அமைப்பு உன்னிப்பாக கவனித்து வருகிறது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் ஜெப்ரேயிசஸ் ஜெனீவாவில் உலக நாடுகளின் தூதர்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில், 'கொரோனா வைரஸ் பெருந்தொற்று. அனைத்து நாடுகளும் உரிய தடுப்பு முறைகளை மேற்கொண்டால் கண்டிப்பாக இதனைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் சில நாடுகள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது எங்களுக்கு மிகுந்த வருத்தம் அளிக்கிறது' என மேலும் தெரிவித்தார். (ஜ)

# வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் ஒருவர் கைது

(கல்கிஸை)

கல்கிஸை பொலிஸ் பிரிவின் ஞானேந்திர வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 5.15 மணியளவில் நபர் ஒருவருக்கு கத்தியால் குத்திக் காயம் ஏற்படுத்தியமை தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை கைது செய்து அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போது சந்தேக நபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்று கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 27 வயதுடைய இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சஜித் அணியில் வெல்கம

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன், குமார வெல்கம தலைமையிலான புதிய இலங்கை சுதந்திரக் கட்சி இணைந்து கொண்டது.

நேற்று முன்தினம் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சின்னமான தொலைபேசி அடையாளத்தை அதிகாரபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போதே, இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்தக் கூட்டணியில் நிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் இணைந்து கொண்டது.

இந்நிகழ்ச்சியில் ரஞ்சித் மத்தும பண்டார சம்பிக்க ரணவக்க, ஹரின் பெர்னாண்டோ.



எரான் விக்கிரமரத்ன, ஹர்ஷ டி சில்வா மற்றும் கூட்டணியின் பிரமுகர்கள் பலர் பங்கேற்றனர். (இ-7)

# வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோ.சைக்கிள் வீதியோர மின்கம்பத்துடன் மோதி விபத்து

## பிரதமர் பாதுகாப்புப் பிரிவு கான்ஸ்டபிள் பலி!

(பல்லேவெல)

பல்லேவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பஸ்சியாய, மீரிகமை வீதியில் காபிட்டிகமை வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்து இடம்பெற்றது. விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி மீரிகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மரணித்தவர் 28 வயதுடைய மாலிகாதென்ன, வெயங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இவர் பிரதமர் பாதுகாப்பு பிரிவில் பணியாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார். மேலதிக விசாரணைகளை பல்லேவெல பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (இ-7)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்

02



கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

முதலாவது குடியரசு அரசியலமைப்பு



சிறிமாவோ பண்டாரநாயக்கா

**1972 ஆம் ஆண்டு யாப்பின் அடிப்படை இயல்புகள்**

● அதுவரை "லங்கா" (சிலோன்) எனும் பெயரால் அழைக்கப்பட்ட இலங்கை, 1972 முதல் ஸ்ரீலங்கா எனும் பெயரால் வழங்கப்பட்டது.

● 1956 இல் பாராளுமன்றச் சட்ட மூலம் அரச கரும மொழியாக்கப்பட்டிருந்த சிங்களம், அரசியல் யாப்புச் சட்ட மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

● பௌத்த சமயத்திற்கு முதலிடம் வழங்கப்பட்டது.

● மக்கள் இறைமையை நிலைநாட்டுதல், சோல்பரி யாப்பின் கீழ் இலங்கைப் பாராளுமன்றத்துக்கு இறைமை அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் குடியரசு யாப்பின் முதலாம் அத்தியாயத்திலே மக்கள் இறைமை (சர்வஜன வாக்குரிமை மற்றும் அடிப்படை மனித உரிமை என்பன) பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

● 1948 முதல் செயற்பட்ட இரண்டு சபைகளைக் (செனற்சபை, பிரதிநிதிகள் சபை) கொண்ட பாராளு மன்றம் நீக்கப்பட்டு ஒற்றைச் சபையைக் கொண்ட "தேசிய அரசுப்பேரவை" நிறுவப்பட்டது. இதுவே மக்கள் இறை மையை செயற்படுத்தும் அதியுயர் ஸ்தாபனமாக விளங் கியது.

**● 1972 முதலாம் குடியரசு யாப்பில் மக்களின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை அதிகாரங்கள்**

**மக்களின் சட்டத்துறை அதிகாரம்**

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிர்திநிதிகளைக் கொண்ட தேசிய அரசுப் பேரவை மூலம் செயற்படல்.

**மக்களின் நிறைவேற்றுத்துறை அதிகாரம்**

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதமர், அமைச்சர் அடங்கிய அமைச்சரவை மூலம் செயற்படல்.

**மக்களின் நீதித்துறை அதிகாரம்**

மக்களின் நீதித்துறை உரிமைகளைப் பாதுகாப் பதற்கும் உயர் நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றத் தொகுதியின் மூலம் செயற்படுத்தப்படும். அந்த நீதிமன் றங்களின் நீதிபதிகள் பொதுமக்களின் பிரதிநிதியான பிரதமரின் சிபார்சுகளுக்கு அமைய ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். நீதித் துறையின் சுயாதிபத்தியத்தைப் பாதுகாப்பதற்காக நீதிச்சேவை ஆலோசனைச் சபையும், நீதிச்சேவை ஒழுங்காற்றுச் சபையும் உருவாக்கப்பட்டது. 1972 வரை இலங்கை நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவருக்கு பிரித்தானியாவின் பிரீவிக்கவுன்சிலுக்கு மேன் முறையீடு செய்யும் உரிமை இருந்தது. ஆனால் 1972 யாப்பின்படி அது முற்றாக நீக்கப்பட்டது.

1962 இல் இடம்பெற்ற அரசுக்கு எதிரான சதிப்புரட் சியாளர்களுக்கு இலங்கை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து குற்றாவாளிகள் அன்றைய தினமே பிரீவிக் கவுன்சிலுக்கு மேன் முறையீடு செய்து அதனூடாக விடுதலையானார்கள். இது இலங்கையின் தன்னாதிக் கத்துக்கு சவாலாக அமைந்தது.

**● 1972 முதலாம் குடியரசு யாப்பில் ஆளுநர் நாயகம்/மகாதேசாதிபதி எனும் பதவிக்குப் பதிலாக ஜனாதிபதி**

ஆளுநர் நாயகம் எனும் பதவிக்குப் பதிலாக ஜனா திபதி எனும் நிர்வாகப் பதவி ஏற்படுத்தப்பட்டது. சோல்பரி யாப்பின்படி இலங்கை அரசின் தலைவியாக பிரித்தானிய மகாராணியே விளங்கினார். சட்டமியற்றுதல், நிர்வாகம், நீதிமன்றத் தீர்ப்புகள் எல்லாம் அவரின் பெயராலேயே நிறைவேற்றப்பட்டன. மகாராணியின் அதிகாரங்கள் முடியின் பிரதிநிதியான ஆளுநர் நாயகத்தால் நிறை வேற்றப்பட்டன. 1972 குடியரசு யாப்பு ஆளுநர் நாயகம் பதவியை நீக்கியதுடன் பெயரளவு நிர்வாகியாக ஜனாதிபதி பதவியை அறிமுகப்படுத்தியபின் பிரித்தானிய மகாரா ணியின் ஆட்சிக்காலம் முடிவடைந்தது. எனவே இலங்கை அரசின் தலைவராக குடியரசு ஜனாதிபதி பெயரளவு நிர்வாகியாகப் பதவி வகித்தார். இவர் பிரதமரின் ஆலோச னைப்படி நியமிக்கப்பட்டார்.

**1978 இரண்டாம் குடியரசு யாப்பு**

1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 50% இற்கு மேற்பட்ட வாக்கு களையும் 80% இற்கு மேற்பட்ட ஆசனங்களையும் பெற்றுக்கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமை யிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைத்தது. 1972 முதலாம் குடியரசு யாப்புக்குப் பதிலாக புதிய அரசியல் யாப்பினை அறிமுகப்படுத்துவதற்கான பூர்வாங்க வேலை களை ஜே.ஆர்.ஜெயவர்த்தன மேற்கொண்டார்.

அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பற்றி கலந்துரையாடும் தீர்மானம் அனைத்து அரசியல் தலைவர்களிடமும் முன்வைக்கப்பட்டது. முதலாவது குடியரசு யாப்பின் திருத் தமாக அரசாங்கம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அறிமுகத்தோடு 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு முறை கொண்டு வரப்பட்டு அதுவே இரண்டாவது குடியரசு யாப்பாகக் கொள்ளப்பட்டது. இவ் அரசியலமைப்பே தற்போதும் செயற்பாட்டில் இருக்கின்றது.

இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு



ஜே.ஆர்.ஜயவர்தனா

மக்களால் நேர்டியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறை வேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவரின் கீழ் நிர்வாகத்துறையைக் கொண்டுவரும் வகையில் 1978 இரண்டாம் அரசியலமைப்பை ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கியிருந்தார். புதிய அரசியல் யாப்பொன்றை அறிமுகப்படுத்துவதன் நோக்கங்கள் பற்றி ஜே.ஆர். ஜெயவர்த்தன பின்வருமாறு கூறினார்.

"சில நாடுகளில் நிறைவேற்றுத்துறை நேரடியாக வாக்காளர்களால் தெரிவு செய்யப்படுகின்றது. அந்நிறை வேற்றுத்துறையானது யாப்பு சீர்திருத்தத்தை எதிர்பார்க் காது செயற்படுவதாகும். பிரான்சின் புதிய யாப்பானது ஐக்கிய அமெரிக்க யாப்பும், பிரித்தானிய யாப்பும் சேர்ந்து உருவா னதாகும். அங்கு காணப்படும் நிறைவேற்றுத் துறையா னது மிகவும் பலம் வாய்ந்ததாகும். பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுத் துறையைப் போல் தெரிவு செய்வோருக்குக் கட்டுப்பட்டும் பாராளுமன்றக் குற்றப் பிரேரணைகளைப் பற்றி அச்சங்கொண்டும் செயற்படாது சரியான முடிவுகளை எடுப்பதற்கான சக்தியு டன் அதிகாரத்தில் நிலைத்திருப்பதற்கு அந்நிறைவேற்றுத் துறையினால் முடியும். இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்நிறைவேற்று அதிகாரம் இன்றியமையாதது என்பதே எனது கருத்தாகும்." என்று தெரிவித்திருந்தார்.

இந்த யாப்பு அறிமுகப்படுத்தப்பட்ட அந்த நாளில் அதைச் செய்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன "ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாதே தவிர மற்றெல் லாவற்றையும் இந்தப் பதவி செய்ய முடியும்" என்று தனது நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியைப் பற்றிப் பெருமிதத் துடன் கூறியிருக்கின்றார். அந்த அளவுக்கு அமைச்சர வையை அமைக்கவும், எந்த அமைச்சினையும், அவை எத்தனை அமைச்சுக்கள் ஆனாலும், தனது நேரடி அதிகாரத்தின் கீழ் கொண்டுவரவும், வரவு-செலவுத் திட்டத்தின் இடைக் காலத்தில் எந்த அமைச்சினதும் நிதி வளங்களைத் தனது அமைச்சின் கீழ் கொண்டு வரவும், அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தவும், ஒரு வருடத்தின் பின்பு பாராளுமன்றத்தினைக் கலைக்கவும் தேர்தல்களைக் கூட்டவும், எந்தத் தவறிழைத்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்படாதிருக்கவும் ஜனாதிபதிக்கு சகல அதிகாரங்களும் இருந்தது.

> **ஒரு அரசியல் யாப்பானது நாட்டின் ஆட்சியின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இயக்க வேண்டிய முறை பற்றியும், நிர்வாக நடைமுறைகள் பற்றியும் விளக்குகின்றது. இவை தவிர, இந்த இரண்டு அங்கங்களும் மிதமிஞ்சிய அதிகாரங்களோடு தம் இஷ்டத்துக்கு இயங்காத வண்ணம் பார்த்துக்கொள்வதற்கு மூன்றாம் அங்கமாகிய நீதித் துறையானது ஒவ்வொரு அரசின் யாப்பினுள்ளும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.**

**1978 ஆம் ஆண்டு யாப்பில் அதிகாரங்கள்**

**மக்களின் சட்ட அதிகாரம்:**

மக்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் சட்டங்களை உருவாக்குவர்.

**மக்களின் நிர்வாக அதிகாரம்:**

தேர்தல் மூலம் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியும் அவரால் தெரிவு செய்யப்படும் அமைச்சரவையும் நிர்வாக நடவடிக்கைகளை மேற் கொள்கின்றன.

**மக்களின் நீதிமன்றம்:**

மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படும் நீதிபதிகளால் மேல் நீதிமன்றம் உட்பட ஏனைய நீதிமன்றங்களாலும் நீதித்துறை செயற்படும்.

**நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை.**

1972 இலிருந்து செயற்பட்டு வந்த முதலாம் குடியரசு யாப்பில் செய்யப்பட்ட இரண்டாவது திருத்தத்தின் படி 1978 ஆம் ஆண்டு யாப்பிலும் இப்பதவி முதன்மைப்படுத்தப் பட்டது. 1978 அரசியல் யாப்பு இலங்கைக்கு அறிமுகம் செய்த நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையானது முழுமையான சர்வ வல்லமை படைத்த ஒரு பதவியாகும்.அவரின் அதிகாரங்கள் சில கீழே தரப்படுகின்றன.

● இரண்டாம் குடியரசு யாப்பின் 30 ஆம் உறுப்பு ரையின்படி இலங்கை ஜனாதிபதியானவர்.

- நாட்டின் தலைவரும்
- நிர்வாகத்தின் அரசாங்கத்தினதும் தலைவரும்
- முப்படைகளின் தளபதியுமாவார்.
- மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி பதவியானது ஐந்து வருட பதவிக்காலத்தை உடையது.

● அரசியல் யாப்புத்திட்ட சீர்திருத்தம் அல்லாத, பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட எந்தவொரு சட்ட மூலத்தையும் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்புக்கு விட்டு நிறைவேற்றிக் கொள்ளும் சட்டத்துறை அதி காரத்தையும் அவர் கொண்டுள்ளார்.

● இலங்கையின் எந்தவொரு நீதிமன்றத்தாலும் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவருக்கு,

- மன்னிப்பு வழங்கல்.
- தண்டனையைக் குறைத்தல், ஒத்திவைத்தல்.
- விதிக்கப்பட்ட தண்டனையில் இருந்து விடுதலை யளித்தல் போன்ற அதிகாரங்கள்

● மற்றைய அதிகாரங்கள்

- போர், சமாதானம் என்பவற்றைப் பிரகடனம் செய்தல்.
- அரசாங்க வைபவங்களுக்குத் தலைமை வகித்தல்.
- குடியரசின் இலட்சினையை வைத்திருத்தலும், அரச முத்திரையையிட்டு காணி, நிலம், சொத்துக்களைப் பகிர்ந்தளித்தலும்.
- வெளிநாட்டுத் தூதுவர்கள், ஆணையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளை நியமனம் செய்தல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கான தலைவர், அங்கத்தவர்களையும், பல் கலைக்கழங்களுக்கான வேந்தர்களையும், துணை வேந்தர்களையும் நியமனம் செய்தல்.

(தொடரும்...)

## குளிர்பானங்களைத் தவிர்த்து

# சூடான நீராகாரங்களை அடிக்கடி பருக வேண்டும்

### வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுநோயாளர் ஒருவர் இனங்காணப்பட்டால் அவருக்கு சிகிச்சை வழங்குதவதற்குரிய ஏற்பாடுகள் யாழ்போதனா வைத்தியசாலையில் செய்யப்பட்டுள்ளன எனவும் சூடான நீராகாரங்களை அடிக்கடி பருக வேண்டும், குளிர்பானங்களைத் தவித்தல் நன்று எனவும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தினார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், உலகில் பல நாடுகளில் கொரோனா வைரஸ் மிக வேகமாகப் பரவிவரும் சூழலில் இலங்கையில் உள்நாட்டில் தொற்றுக்குள்ளான இரண்டு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்நோய் பரம்பலை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சு எடுத்துவருகின்றது.

இதன் அடிப்படையில் இந்நோய் மிகத்தீவிரமாக பரவிவரும் இத்தாலி, ஈரான், தென்கொரியா மற்றும் சீனாவின் வுஹான் (Wuhan) பிரதேசத்திலிருந்து இலங்கைக்கு வருபவர்கள் இலங்கைக்கு வரும் நாளிலிருந்து 14 நாட்களுக்கு கட்டாய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவர். ஏனைய நாடுகளிலிருந்தும் சீனாவின் வுஹான் (Wuhan) பிராந்தியத்திற்கு வெளியே இருந்தும் வருபவர்கள் வதிவிடங்களில் அல்லது தங்குமிடங்களில் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவர்.

இந்நிலையில் வடமாகாண மக்கள் மத்தியில் இந்நோய் பற்றிய பதற்றமான சூழல் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனினும் வடமாகாணத்தில் இதுவரை ஒருவரும் இந்நோயுடன் இனங்காணப்படவில்லை. எனவே பொதுமக்கள் அச்சமடையத்தேவையில்லை.

எனினும் இந்நோயின் தாக்கத்திலிருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ள பின்வரும் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

1. உலகின் பலநாடுகளில் இந்நோய் தீவிரமாகப் பரவி வருவதால் வெளிநாட்டுப் பயணங்களை முற்றாகத் தவிர்க்கவும்.

2. இத்தாலி, ஈரான், தென்கொரியா மற்றும் சீனாவின் வுஹான் (Wuhan) பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலிருந்து உங்கள் உறவினர்கள், நண்பர்கள் வருகை தந்திருந்தால் அவர்களது வதிவிடங்களில் 14 நாட்களுக்கு தனிமையில் கண்காணிக்க வேண்டப்படுகின்றார்கள். இக்காலப்பகுதிக்குள் அவர்களுக்கு காய்ச்சல், இருமல், சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அருகிலுள்ள அரச வைத்தியசாலைக்குச் சென்று உரிய வைத்திய ஆலோசனையைப்பெறவும்.

3. காய்ச்சல், இருமல், சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் உடையவர்கள் இவை குணமடையும் வரை வேலைத்தளங்களுக்கு செல்லாது உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ளவும்.

4. இக்கிருமித் தொற்றைத் தவிர்க்க உங்கள் கைகளை வீட்டிலும் வேலைத்தளத்திலும் அடிக்கடி சவர்க்காரமிட்டு கழுவவும் வேலைத்தளங்களில் இதற்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும்.

5. சூடான நீராகாரங்களை அடிக்கடி பருகவேண்டும். குளிர்பானங்களை தவிர்த்தல் நன்று.

6. உங்கள் வீட்டிலும் வேலைத்தளத்திலும் தளபாடங்கள் மற்றும் அடிக்கடி பாவனையில் உள்ள பொருட்களை கிரமமாக அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

7. வடமாகாணத்தில் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் தற்பொழுது மூடப்பட்டிருப்பதால் பொது இடங்களுக்கு மாணவர்களை அழைத்துக்கொண்டு சுற்றுலா செல்வதை தவிர்த்தல் நன்று.

மேலும் வடமாகாணத்தில் இக்கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் ஒருவர் இனங்காணப்பட்டால் அவருக்கு சிகிச்சை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் செய்யப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் பதற்றமடையாது மேலே குறிப்பிட்ட தற்பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றது என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மருந்துகளுக்கு பற்றாக்குறை இல்லை

(கொழும்பு)

உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் தாக்கம் இருந்து வருகின்ற நிலையில் இலங்கையில் அத்தியாவசிய மருந்துகள் கிடைப்பதில் பற்றாக்குறை ஏதும் ஏற்படவில்லையென இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனம் அறிவித்தது.

இதுதொடர்பாக ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சம்மேளனம், மருந்து இறக்குமதியாளர்கள் குறைந்தது மூன்று மாதங்களுக்குத் தேவையான மருந்து வகைகளை இருப்பில் வைத்திருப்பதுடன், சில சமயங்களில் அதற்கும் அதிகமான காலங்களுக்குத் தேவையான மருந்துகளை வைத்திருப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கொரோனா வைரஸ் பீதி காரணமாக மருந்துகளை வாங்குவது தேவையற்ற விடயமாகும்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனத்தின் (SLCPI) தலைவி கஸ்தூரி செல்லராஜா தெரிவிக்கையில்,

'தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கும் போது விவேகமானவர்களாகவும் நியாயமானவர்களாகவும் இருக்க வேண்டும், அதற்குப் பதிலாக பீதியடையக் கூடாது' என்றும் தெரிவித்தார்.

'அத்துடன் மூன்று மாதங்களுக்குத் தேவையான மருந்து வகைகள் தற்போது கைவசம் உள்ளது. மேலும் விநியோக சங்கிலியின் நடவடிக்கைகளில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்பதை நாங்கள் உறுதி செய்வோம்' எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இரண்டு முதல் மூன்று மாதங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை மக்கள் வாங்குகிறார்கள் என்று சில்லறை மருந்தக விற்பனையாளர்களிடமிருந்து பல தகவல்கள் கிடைக்கப் பெற்றதையடுத்தே இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

'நாங்கள் இதுகுறித்து பகுத்தறிவுடன் இருக்க வேண்டும், மேலும் இவ்வாறான பயமுறுத்தல்கள் காரணமாக சமூகத்தில் தற்போது நிறைய பேர் பகுத்தறிவில்லாமல் நடந்து கொள்கிறார்கள்' என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

மகாவலி, விவசாய, நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரியின் வயதெல்லை 21-45 ஆக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த.பெ.இல.13, கெட்டம்பே, பேராதனை என்ற முகவரிக்கு 2020.04.03 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு வர்த்தமானியைப் பார்வையிடவும். (இ)

# கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான இலங்கையர்கள் உடல் நிலையில் பாதிப்பில்லை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தகவல்

(கொழும்பு)

கொவிட்-19 என அழைக்கப்படும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி தற்போது ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இரண்டு இலங்கையர்களின் உடல் நலனில் பாதிப்பு ஏற்படவில்லை என சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

மேலும் அவர்கள் தற்போது விசேட சிகிச்சை முறைமைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் எனவும் அவர் பொது மக்களிடம் மீண்டும் கோரிக்கை முன்வைத்தார்.



இதேவேளை, ஈரான், இத்தாலி மற்றும் தென்கொரியாவில் இருந்து நாட்டை வந்தடைந்தவர்களை தனிமைப்படுத்துவதற்காக தியத்தலாவை - கஹகொல்ல பகுதியில் மேலும் சில தனி மைப் படுத்தல் நிலையங்கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

இதன்படி வானூர்திப் பயணிகளை தனிமைப்படுத்துவதற்காக 3 மத்திய நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குறித்த தனிமைப்படுத்தல் நிலையங்களின் செயற்பாடுகள் இராணுவத்தின் தலையீட்டில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா தொற்று பரவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், பல பொருட்களின் விலைகளை அதிகரித்து விற்பனை செய்யும் வர்த்தகர்களை தேடும் சுற்றிவளைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்.மீனவர்கள் இந்தியாவில் கைது! திருப்பியனுப்ப அரசாங்கம் நடவடிக்கை

(சென்னை)

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததாகக் கைது செய்யப்பட்ட 15 இலங்கை மீனவர்களை, கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கைக்கே திருப்பி அனுப்ப இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியக் கடலோர பாதுகாப்புப் படையின் சுற்றிவளைப்பில் கப்பல் வைபவ், கன்னியாகுமரி கடல் பகுதியில் ரோந்து சென்றது. அப்போது, இலங்கையைச் சேர்ந்த மூன்று படகுகள் அத்துமீறி இந்தியக் கடல் பகுதிக்குள் நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்ததை ரோந்து படையினர் கண்டனர். இதையடுத்து, அங்கு விரைந்து சென்ற கடலோர பாதுகாப்பு படையினர் 'சுகந்தி', 'செரல்', 'நெட்மி' எனும் பெயர் கொண்ட 3 படகுகளை மடக்கிப் பிடித்தனர். தொடர்ந்து, அந்த படகுகளிலிருந்த 15 மீனவர்களை கைது செய்தனர்.

இதையடுத்து, படகுகளையும் மீனவர்களையும் தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்துக்கு அழைத்துவர அனுமதி கேட்டனர். ஆனால், 'கொரோனா வைரஸ் எச்சரிக்கை காரணமாக, வெளிநாட்டினர் மற்றும் படகுகளைத் துறைமுகத்துக்குள் அனுமதிக்க முடியாது' என துறைமுக நிர்வாகம் மறுத்துவிட்டது.

இதனால், மீனவர்கள் 15 பேரும் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 10 கல் மைல் தொலைவில் படகுகளுடன் நிறுத்தப்பட்டனர். அவர்களுக்கு, கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளதா எனத் துறைமுக வைத்திய குழுவினர் சோதனை செய்தனர்.

தற்போதுள்ள சூழலில், குறித்த நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தி சிறையில் அடைப்பதில் சிக்கல் உள்ளன. எனவே, 15 மீனவர்களையும் இலங்கைக்கே திருப்பியனுப்ப இந்திய அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்து இலங்கை அரசாங்கத்துக்கு தகவல் தெரிவித்து, சர்வதேச கடல் எல்லையில் 15 மீனவர்களை ஒப்படைக்க உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# கொரோனாவால் இந்தியாவில் முதல் மரணம்

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் காரணமாக முதல் மரணம் பதிவாகியுள்ளது.

கர்நாடகாவில் 76 வயதான ஒருவரே இந்த நோய் தொற்றினால் மரணமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் சவுதி அரேபியாவில் இருந்து கடந்த 29ஆம் திகதி நாடு திரும்பியவராவார்.


இவர் விமான நிலையத்தின் ஊடாக வரும்போது அவருக்கு நோய்த் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படவில்லை.

எனினும் கடந்த 5 ஆம் திகதியன்று மூச்சுத் திணறல் ஏற்படவே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

இந்தியாவில் இதுவரை கொரோனா வைரஸ் காரணமாக 73 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து இந்தியாவில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (ஜ-2)

# ஜனாதிபதியிடம் தலைமைத்துவத்தை வழங்கிவிட்டு பிரதமர் மகிந்த ஓய்வு பெற வேண்டும்

## அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வு பெற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்க வேண்டும் எனவும் இதுவே தற்போது நாட்டு மக்களின் கோரிக்கையாக இருப்பதாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஓய்வு பெற வேண்டும் என்று நான் கூறுகின்றேன். அவர் ஓய்வு பெற்று தலைமைத்துவத்தை ஜனாதிபதியிடம் கையளிக்க வேண்டும். அப்போது பிரச்சினை தீர்ந்துவிடும். இதுதான் நாட்டின் கோரிக்கை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவ த்தை ஜனாதிபதிக்கு வழங்குங்கள் ஜனாதிபதி இலகுவாக பணியாற்ற வசதிகளை கொடுங்கள் போதும்.

கோட்டாபய ராஜபக்ஷ புதிய தலைவர் என்ற வகையில் செயற்பட இடமளியுங்கள். மகிந்த ராஜபக்ஷ உட்பட அவரது அணியினர் எம்மை பொதி செய்து ஒரு புறம் ஒதுக்கி வைக்க முடியும் என நினைக்கின்றனர். அது கஷ்டமானது எம்மை ஒதுக்கி வைக்க முடியாது எனவும் அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# கொரோனா அச்சம் ஹஜ் கடமை ரத்து

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக இம் முறை புனித ஹஜ் கடமைக்கான அனைத்து செயற்பாடுகளையும் சவுதி அரசாங்கம் தற்காலிமாக நிறுத்தியது. 12 நாடுகளுக்கு இந்த அறி வித்தல் பிறப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக இலங்கை அறிவிக்கப்பட்ட முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பீ.எம். அஷ்ரஃப் தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நெடுஞ்சாலையில் பேருந்து தீக்கிரை!



(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான சொகுசு பேருந்தொன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கஹதுடுவ பகுதியில் 3.6 மைல் கல்லுக்கு அருகில் நேற்றுக் காலை குறித்த அனர்த்தம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாகும்புரவிலிருந்து காலி நோக்கிப் பயணித்த பேருந்தே இவ்வாறு தீ விபத்திற்கு உள்ளானது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் தீயணைப்பு பிரிவினரால் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த அனர்த்தத்தின்போது எவருக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கொரோனாவிலிருந்து பாதுகாப்புபெற சீனாவால் முகக்கவசங்கள் நன்கொடை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றை பரிசோதிக்கும் 1000 கருவிகள் மற்றும் 50 ஆயிரம் வைத்திய முகக்கவசங்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க சீனா முன்வந்துள்ளது.

கொரோனா வைரஸ் இலங்கையில் பரவி வரும் நிலையில், இந்த உதவியை வழங்க சீனா முன்வந்துள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் அறிவித்தது.

கொரோனா வைரஸ் பாதிப்பால் சர்வதேச அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக 4,972 ஆக உயர்ந்துள்ளது. சீனாவில் வுஹான் மாகாணத்தில் பரவிய கொரோனா வைரஸ் உலகில் 127 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் அச்சுறுத்தி வருகிறது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் முதல் முதலில் பரவத் தொடங்கிய சீனாவில், அந்த வைரஸ் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,169 ஆக உயர்ந்துள்ளது. அதையடுத்து, அந்த நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளவர்களின் எண் ணிக் கை 80,796 ஆக அதிகரி த்துள்ளது. எனினும் அங்கு நோய்தொற்று நீங்கி படிப்படியாக உயிரிழப்பு குறைந்து வருகிறது.

எனினும் இத்தாலி, ஈரான், தென்கொரியா உள்ளிட்ட சுமார் 27 நாடுகளில்கொரோனா வைரஸ் பாதிப்பால் 1,552 பேர் உயிரிழந்தனர்.

இலங்கையில் மூவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருந்த நிலையில், ஒருவர் குணமடைந்துள்ள நிலையில், இருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2002

### அமுதன்




### ரவி




### மாதவி




### மேனன்




### சஞ்சு




### கண்ணன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2020-13.04.2020



## வாய்ப்புகள் வாசல் தேடி வரும் நேரம்




விகாரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே சுக்கிரன் சஞ்சரிக்கிறார். அவர் இராசியிலேயே சஞ்சரிப்பதோடு, சப்தம ஸ்தானமான துலாம் இராசியையும் பார்க்கிறார். இதனால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். புண்ணிய காரியங்களுக்குப் பொருளுதவி செய்து மகிழ்வீர்கள். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொகை வரவு எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகும். நினைத்ததை உடனடியாக செய்து முடிக்கும் விதத்தில், கிரகங்கள் சாதகமான நிலையில் சஞ்சரிக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் 9 ஆம் இடத்தில் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். குரு, தன் சொந்த வீட்டில் இருப்பதால் பலம்பெற்றவராக இருக்கிறார். மேலும் குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிகிறது. எனவே முயற்சித்த காரியங்கள் வெற்றியாகும். தந்தை வழி சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைய தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். சனி மற்றும் கேது ஆகிய இரண்டு கிரகங்களும் இலாப ஸ்தானத்தைப் பார்ப்பதால் உறவினர்களுக்காகவும் ஆன்மீகத்திற்காகவும் கொஞ்சம் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும். சூரியன் 12 இல் சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் நல்ல விரயங்கள் ஏற்படலாம்.

இம்மாதம் பங்குனி உத்திரத் திருநாளில் முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

மகர செவ்வாய் சஞ்சாரம்

மார்ச் 22 ஆம் திகதி மகர இராசிக்கு செவ்வாய் செல்கிறார். மகர இராசி செவ்வாய்க்கு உச்ச வீடாகும். இது ஒரு உன்னதமான நேரமாகும். தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். பூமி வாங்குவது அல்லது விற்பது சம்பந்தமாக ஏதேனும் முயற்சி செய்திருந்தால், அந்த முயற்சிகள் பலன் தரும். சகோதர ஒற்றுமை பலப்படும்.

மகர குரு சஞ்சாரம்

மார்ச் 27 ஆம் திகதி மகர இராசிக்கு, குரு செல்கிறார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். இருப்பினும் நீச்சம் பெற்ற குரு, உச்சம் பெற்ற செவ்வாயோடு இணைவதால் 'நீச்ச பங்க இராஜ யோகம்' ஏற்படுகிறது. எனவே கவலைப்படத் தேவையில்லை. 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு வலிமை இழக்கும்பொழுது, ஒருசில காரியங்களில் தாமதம் ஏற்பட்டாலும் முடிவில் வெற்றி கிடைக்கும்.

ரிஷப சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 29 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். தனாதிபதி தன ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். புனிதப் பயணங்கள் உருவாகும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவுக்குப் பாத்திரமாகி, 'தொழிலைப் பெருக்கிக்கொள்வீர்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. சாட்சி கையெழுத்துப் போட்டதன் மூலம் ஏற்பட்ட சங்கடங்கள் அகலும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

நீச்ச புதன் சஞ்சாரம்

ஏப்ரல் முதலாம் திகதி மீன இராசிக்கு செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். 3,6 இற்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம்தான். எதிர்பாராத சில நல்ல மாற்றங்கள் ஏற்படலாம். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். உறவினர்கள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக வரவேண்டிய பதவி உயர்வு இப்பொழுது வருவதற்கான அறிகுறிகள் தென்படும்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் வசதி வாய்ப்புகள் பெருகும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டு உறவினர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படும் வகையில் இருக்கும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள். பள்ளம் மேடுகளை கடந்து, உங்களுக்கென்று தனிப் பாதையை வகுத்துக் கொள்வீர்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். ஆபரண சேர்க்கை உண்டு. பெண்களுக்கு வேலைப் பளு கூடும். நீச்ச புதன் ஆதிக்க காலத்தில், சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். பங்குனி உத்திரத் திருநாளில் முருகப் பெருமானை வழிபடுங்கள்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## பொறுமையாகச் செயற்பட வேண்டிய நேரமிது






விகாரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இந்த நேரத்தில் தன பஞ்சமாதிபதியான புதன், தொழில் ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்கிறார். எனவே தொழில் வளர்ச்சி பெருகும். பொருளாதாரம் போதுமானதாக இருக்கும்.

குருவின் பார்வை பலம் 2,4,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். கொள்கைப்பிடிப்போடு செயற்படவும் முடியும். பெற்றோர்களின் ஆதரவும் பிரியமானவர்களின் ஒத்துழைப்பும் உண்டு. படிப்புக்கேற்ற வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவோடு விரும்பிய இடமாறுதல் பெறுவீர்கள். வீடு வாங்கிக் குடியேறும் வாய்ப்பு கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வரலாம். ஆயினும் அது திருப்தி அளிப்பதாக அமையாது. அஷ்டமத்தில் குரு, கேது, சனி, செவ்வாய் ஆகிய 4 கிரகங்கள் இருக்கும் பொழுது, வெளிநாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டினாலும், அது கைகூடுவது அரிது. வாக்கிய கணித ரீதியாக டிசெம்பர் மாதம்தான் சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. அதற்கு ஓரிரு மாதங்கள் முன்னதாக நல்ல காரியங்கள் நடைபெறும்.

செவ்வாயின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால், ஒருசில சமயங்களில் உங்களுக்கு முன்கோபம் அதிகரிக்கும். கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது. தட்டிச் சென்ற வாய்ப்புகள் எல்லாம் தானாகக் கிடைக்க வேண்டுமானால், பங்குனி உத்திரம் அன்று வேலவனை வழிபட்டு வெற்றிகளை வரவழைத்துக்கொள்ளுங்கள்.

மகர செவ்வாய் சஞ்சாரம்

அஷ்டமத்தில் சஞ்சரித்து வரும் செவ்வாய், மார்ச் 22 ஆம் திகதி மகரத்திற்கு செல்கிறார். மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுவது யோகம்தான் என்றாலும் செவ்வாய், சப்தம - விரயாதிபதியாக விளங்குவதால் வாழ்க்கைத் துணை வழியே விரயங்கள் ஏற்படும். குறிப்பாக அவர்களின் கல்வி முன்னேற்றம் கருதியோ, வேலைவாய்ப்பைக் கருதியோ ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். பழைய வாகனங்கள் அடிக்கடி பழுதாவதால், புதிய வாகனம் வாங்குவதிலும் செலவிடுவீர்கள்.

மகர குரு சஞ்சாரம்

மார்ச் 27 ஆம் திகதி மகரத்திற்கு, குரு செல்கிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். அஷ்டமாதிபதி நீச்சம் பெறும் இந்த நேரத்தில், இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வரும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் இருந்த தடைகள் அகலும். வருமானம் அதிகரிக்க புதிய வழி பிறக்கும். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவிற்கு வரும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பஞ்சாயத்துக்கள் உங்களுக்குச் சாதகமாகும்.

ரிஷப சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 29 ஆம் திகதி ரிஷப இராசிக்கு, சுக்கிரன் வருகிறார். இராசிநாதன், உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். செல்வாக்கு உயரும். தேவைகள் பூர்த்தியாகும். உள்மனதில் இருந்த தயக்கங்கள் அகல, நல்லவர்களின் தொடர்பு நலம் பயக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். இக்காலத்தில் நீச்ச குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் எடுக்கும் முயற்சிகளில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

மீன புதன் சஞ்சாரம்

ஏப்ரல் முதலாம் திகதி மீன இராசிக்கு செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். தன - பஞ்சமாதிபதியாக விளங்கும் புதன் நீச்சம்பெறும் இந்தக் காலகட்டத்தில், பணப்புழக்கம் குறைவாகவே இருக்கும். கொடுக்கல்- வாங்கலில் கவலை ஏற்படும். 'தேங்கிய சில காரியங்கள் இன்னும் முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். உறவுகளில் உரசல் ஏற்பட்ட அகலும். நிதானத்தோடு செயற்படுவதன் மூலம் நிம்மதி கிடைக்கும் நேரமிது. இம்மாதம் பிரதோஷ நேரத்தில் நந்தியை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்


இம்மாதம் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய், மார்ச் 22 ஆம் திகதி ஒன்பதாம் இடத்திற்குச் செல்கிறார். இதனால் மாதத்தின் முதல் வாரம் மட்டும் கூடுதல் விரயங்கள் ஏற்படலாம்.

குரு, மகரத்திற்கு வந்த பின்பு அது நீச்ச குருவாகி பார்வையைச் செலுத்தப்போவதால் படிப்படியாக நன்மைகள் வந்து சேரும். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் கூடும். உறவினர்கள் பகை மறந்து உதவுவர். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி, பெருந்தொகையை செலவிடுவீர்கள். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். இம்மாதம் பங்குனி உத்தரத்தன்று முருகப்பெருமானை வழிபடுவதோடு, அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்திற்கு பரிகாரமாக சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## துருப்பிடிக்க விடாதே



மாவட்ட அளவிலான ஓட்டப் பந்தயம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடந்த ஒரு மாதம் தீவிர பயிற்சியுடன் களத்தில் ஓடுவதற்கு தயாராக இருந்தான் மணி. இந்த முறை எப்படியாவது பரிசு வெல்ல வேண்டும் என்ற எண்ணம் தான் மனதில் இருந்தது.

விசில் ஊதப்பட்ட சத்தம் கேட்டவுடன் ஓடத் தொடங்கினான். அவனது கால்கள் குதிரையைப் போல பறந்தன. எல்லாரையும் மீறி முதல் இடத்தை பிடித்தான். பரிசு வாங்கிய கைகயோடு வீட்டிற்குச் சென்றான்.

வயலில் உழுது கொண்டிருந்த அப்பாவை நோக்கிச் சென்று பரிசைக் கொடுத்தான். மிகுந்த மகிழ்ச்சியோடு உனது விடா முயற்சிக்கும் தொடர் பயிற்சிக்கும் கிடைத்த வெற்றி என்று பாராட்டினார்.

சில மாதங்கள் கடந்தன. பொங்கல் தினத்தன்று மணியின் ஊரில் ஓட்டப்பந்தயம் வைக்கப் பட்டது. ஊரார் முன்னிலையில் நடத்தத் தொடங்கினான். ஆனால் பழைய வேகமில்லை. கால்களில் ஏதோ வலி தெரிந்தது. பரிசு பெறவே போராட வேண்டியிருந்தது. இறுதியாக மூன்றாம் பரிசு பெற்றான். தன்னால் முதல் பரிசு பெற முடியவில்லையே என்ற வருத்தத்தோடு அப்பாவிடம் சொன்னான்.


"இந்த ஏர்கலப்பையை பார்த்தாயா, இதை ஒரு வாரம் தான் பயன்படத்தவில்லை. அதற்குள் துருப்பிடித்து விட்டது.

இதுபோல தான் உன்னிடம் திறமையும் ஆற்றலும் இருந்தது. ஆனால் தொடர்ந்து பயிற்சி இல்லை" என்றார் அப்பா.

"வெற்றி பெற உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் இல்லையென்றால் துருப்பிடித்துப் போய்விடும்" என்பது மணிக்கு புரிந்தது.

## இலக்கங்களின் படி நிறந்தீட்டுங்கள்

1 - பச்சை, 2 - செம்மஞ்சள், 3 - மண்ணிறம், 4 நீலம். 5 - ஊதா. 6 - மஞ்சள்



## தமிழ் ஒத்தகருத்துச் சொற்கள்

- அசுவம் - குதிரை
- அசுழம் - நாய்
- அச்சம் - பயம்
- அடி - பாதம்
- அடிகோலுதல் - தொடங்குதல்
- அடிசில் - உணவு
- அடிச்சுவடு - காலடித்தடம்
- அடியிடல் - தொடங்குதல்
- அடியார் - தொண்டர்
- அடுக்களை - சமையலறை
- அடைக்கலம் - புகலிடம், சரண்புகல்
- அணங்கு - தெய்வப்பெண்

## விடுகதைகளும் விடைகளும்

- ஒளி தந்த உத்தமன். உருக்குலைவான் அதனாலே.

**மெழுகுவர்த்தி**

- தண்டைச் சலங்கைக்காரி தலைவாசல் வீட்டுக்காரி அவளைத் தொடுவானேன்? கவலைப்படுவானேன்?

**தேள்**

- கோயிலுக்குப் போனேன் கும்பிடு போட்டேன். பூவில்லாத இலையைப் போற்றி வைத்தேன். பழுக்காத காயைப் பணிந்து வைத்தேன். விதையில்லாக் கனியை வேண்டி வைத்தேன்.

**வெற்றிலை, தேங்காய், வாழைப்பழம்**

- தண்ணீரில் நீந்திவரும் - அது தரையிலே தாண்டி வரும்.

**தவளை**

- பாத்தி சிறு பாத்தி பாய்வது கரு நீர். வேரோ வெள்ளை வேர். பூவோ செம்பூ.

**அகல் விளக்கு**

- கண்ணுண்டு செவியில்லை. கண்டிடும் கேட்டிடும்.

**பாம்பு**

- முத்து முத்துத் தோரணம். தரையில் விழுந்து ஓடுது.

**மழை**

- பார்ப்பதற்கு ஐந்து கால் எண்ணுவதற்கு நான்கு கால்.

**யானை**

- பார்த்தால் பார்க்கும் சிரித்தால் சிரிக்கும் குத்திப் பார்த்தால். பத்துச் சில்லாம்.

**முகம் பார்க்கும் கண்ணாடி**

- மரத்திற்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல. பட்டை அடித்திருப்பான் சாமியாரல்ல.

**அணில்**

- நூல் இல்லை ஊசி உண்டு வாயில்லை பாட்டுப்பாடும்

**கிராமபோன்**

- இரவில் சுமந்திடுவான் பகலில் சுருண்டிடுவான்.

**பாய்**

## தரத்தை உறுதிப்படுத்தும் குறியீடுகள்

தரமான பொருட்களை நாம் வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக எமது நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் தரத்தை உறுதிப்படுத்தும் குறியீடுகள் உள்ளன.

SLS (Sri Lanka Standard) இது ஒரு பொருளின் நுகர்வுக்கான தரத்தினை உறுதிப்படுத்துகின்ற குறியீடு ஆகும். இதனை வழங்குவது இலங்கைத்தரக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் SLS எனும் இக்குறியீடு லேபல்களில் பொறிக்கப்பட்டிருக்கும்.

இலங்கையில் விற்பனை செய்யப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் இக்குறியீட்டைப் பெற்று இருத்தல் கட்டாயமானது.

ISO

சர்வதேச ரீதியாகப் பொருளின் தரம் குறித்து வழங்கப்படும் சான்றிதழ் இதுவாகும்.


வழங்குபவர் - ஐக்கிய இராச்சியத்தின் (U.K) சர்வதேச தர முகாமைச் சபை.


SLIM

வாங்குபவர் - Sri Lanka Institute of Marketing (இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம்)

சிறந்த நுட்பங்களுடன் கூடிய வியாபார நிலையங்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் ஆகும்.

கப்பல் வாழைப்பழத்தை ''கோழிக்கோட்டுப் பழம்'' எனவும் அழைப்பார்கள். இவ்வாழை இனம் இந்தியாவின் கேரளாவிலிருந்து கோழிக்கோடு எனும் இடத்திலிருந்து கப்பல் மூலமாக எமது நாட்டிற்கு எடுத்து வரப்பட்டதால் இப் பெயர் ஏற்பட்டது.





## பொன்மொழி

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களே யொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.

-ஆபிரகாம் லிங்கன்

பிழையைச் சரிப்படுத்திக்கொள்ள முயற்சி செய்வதில் அவமானம் இல்லை

-ராஜாஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உலகம் உய்யும் வண்ணம் யாக வேள்வி செய்ய வேண்டும்

உலக விஞ்ஞானம் விண்ணைத் தொட்டு விட்டது என்று மார்தட்டிக் கொண்டிருக்கையில், கொரோனா வைரஸ் உலகை உலுப்பி நிற்கிறது.

மெய்ஞானத்தைக் கடந்து விஞ்ஞானத்தால் எதுவும் செய்துவிட முடியாது என்பதை இந்த மானிட உலகுக்குஉணர்த்துவதுபோலகொரோனா வைரஸ் தொற்று மனித சமூகத்தின் இயங்கு நிலையை ஸ்தம்பிதமடையச் செய்துள்ளது.

தர்மத்தை மறந்து அதர்மத்தின் வழியில் மானிடம் பயணிக்கும்போது, இந்த உலகப் பிரபஞ்சத்தின் சமநிலையைப் பேணுகின்ற கடமையை இறைவன் செய்கின்றான் என்பது இந்து தர்மம் உள்ளிட்ட அத்தனை சமயங்களினதும் முடிபு.

ஆக, காலத்துக்குக் காலம் இறைவன் தனது கணக்கெடுப்பை நடத்தி இருப்பை சமப்படுத்த முற்படும்போது ஆக்கமும் அழிவும் நடந்தாகிறது.

இது இன்று நேற்றல்ல. இந்த உலகப் பிரபஞ்சம் தோன்றிய காலத்தில் இருந்தே அமுலாகி வருகிறது.

இதை உணர்ந்த மெய்ஞானிகள் இந்த உலகின் நிலையாமை பற்றி மிகத் தெளிவாக எடுத்துரைத்து, தர்மத்தைப் பாதுகாக்கும் வண்ணம் போதித்தனர்.

இருந்தும் இன்றைய மானிட சமூகம் கடவுளுக்குப் பயப்படாமல், தர்மத்துக்கு அஞ்சாமல் பணமும் பொருளும் இருந்தால் எல்லாம் கிடைத்துவிடும் என்ற மமதையில் இயங்குகிறது.

ஆனால், கடந்த யுகங்களில் உலகம் உய்யும் பொருட்டு தர்மத்தைப் பேணும் வகையில் யாக வேள்விகளை நடத்தி நம் முன்னோர்கள் இந்த உலகைக் காப்பாற்றினர்.

அற்றைக் காலத்து மன்னர்கள் யாகம் செய்து அதனூடு புனிதமான சூழலை ஏற்படுத்தினர்.

இத்தகைய யாகத்தின் மூலம் தொற்று நோய்கள் தடுக்கப்பட்டன.

வேத விற்பன்னர்கள் நிலைமைகளை ஆராய்ந்து அதற்குரியவாறான யாக வேள்விகளைச் செய்தனர்.

இதில் அசுவமேத யாகம் என்பது மிகவும் உயர்வானது.

எனவே தற்போது உலகை நடுங்க வைத்துக் கொண்டிருக்கும் கொரோனாத் தொற்றில் இருந்து உலகைக் காக்க இறைவனிடம் கையேந்துவதைத் தவிர வேறு எந்த வழியும் இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே சிவாச்சாரியர்கள், வேதவிற்பன்னர்கள் ஒன்றிணைந்து உலகைக் காப்பாற்றும் வகையில் மகா யாகம் செய்ய வேண்டும்.

அதனூடு இந்த உலகின் கண் நின்று உலைக்கின்ற மாபாவத்துக்கு விமோசனம் தேட வேண்டும்.

இதைக்கூறுவதுகூட சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் நிலைமைகளை அனுபவ ரீதியாக உணர்கின்றோம். எனவே விண்ணைத் தொட்ட விஞ்ஞானத்தை அண்டம் கடந்த பொருளாகிய இறைவன் சிறிதாகச் சீண்டுகிறான்.

அவ்வளவுதான், மூச்சுவிடும் சுதந்திரம் கூட மூடிக்கட்டப்படுகிறது. இறை நாமத்தைச் சொல்லாத நா பூட்டப்படுகிறது.

கண்டதையும் உண்ட வாய் அடைக்கப்படுகிறது. ஆகையால் வேதங்கள் அறம் எனப் போற்றும் யாகத்தை நம் சிவாச்சாரியர்கள் உடன் செய்தாக வேண்டும்

# கொரோனாவை எதிர்கொள்ள அரசிடமுள்ள திட்டம் என்ன?

## மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்-ரணில்

(கொழும்பு)

கொவிட் - 19 வைரஸ் நோய்த்தொற்று அச்சுறுத்தலை எதிர்கொள்ள அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றது என்று நாட்டு மக்களுக்குத்தெளிவுபடுத்த வேணடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இது குறித்து ரணில்வெளியிட்டிருககும் அறிக்கையில்,

கொவிட் - 19 எனப்படுகின்ற கொரோனா வைரஸ் தொற்று உலகளாவிய ரீதியில் மிகமோசமாகப் பரவியிருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது. அதேபோன்று இந்நிலைகைகு தாம் எவ்வாறு முகம் கொடுக்கின்றோம் என்பது குறித்து அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகள் பல்வேறு தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் உள்ளடங்களாகப் பெரும்பாலான நாடுகள் இந்த கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்குத் தம்மிடம் போதியளவான சுகாதார வசதிகள் இல்லை என்று அறிவித்திருக்கின்றன.

எனவே எமது நாடு இச்சவாலை எதிர்கொள்ள வேண்டுமெனில், அரச மற்றும் தனியார் சுகாதாரக் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்தி உரிய திட்டமொன்றைத் தயாரித்துக்கொள்வது இன்றியமையாததாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

உலக சமுதாய சேவா சங்கத்தின் யாழ்ப்பாண மண்டலம் நடத்தும் கிராமிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் யாழ்ப்பாண மண்டலத் தலைவர் அருள்நிதி த.குழந்தைவேல் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மா.பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-3)

## வடக்கு, கிழக்கு, மலையகத்தில் ஈரோஸ் போட்டியிடத் தீர்மானம்

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஈழவர் ஜனநாயக முன்னணி (EDF eros) வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளது.

ஈரோஸ் ஒருங்கிணைக்கும் சக்தி என்ற தொனிப்பொருளில் இம்முறை போட்டியிடவுள்ளனர்.

அந்தவகையில் யாழ் மாவட்ட தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்கான நியமனப் பத்திரத்தை நேற்று பெற்றுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் நிலைமைகளில் மாற்றம் ஒன்றின் தேவை இருப்பதால் மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளனர். (ம-9)

## ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டவர்

### பொலிஸ் காவலிலிருந்து தப்பியோட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் பொலிஸ் காவலில் இருந்து நேற்று தப்பி ஓடியுள்ளார்.

முல்லைத்தீவு செம்மலை பகுதியில் ஐஸ் போதைப் பொருளை வீட்டில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரை விசேட அதிரடி படையினர் நேற்று முன் தினம் மாலை கைது செய்துள்ளனர்.

கைது செய்த நபரை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்த நிலையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை 2.50 மணியளவில் குறித்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

(ம-3,281)

## கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் இரண்டு இடங்களில் நடத்திய சோதனை நடவடிக்கைகளில் 660 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் பருத்தித்துறை தம்பசிட்டி பகுதியல் 400 கிராம் கேரளக் கஞ்சாவுடன் வயோதிபர் ஒருவர் கைது செய்யப்பட் டார்.

இதனைத் தொடர்ந்து பிற் பகல் 2 மணியளவில் மாமுனை பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது 260 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

## திறப்பு விழா

(புதுக்குடியிருப்பு)

இஷானியா கலா மன்றத்தின் திறப்பு விழா இன்று 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு புதுக்குடியிருப்பு வற்றாப்பளை வீதியிலுள்ள இஷானியா கலா மன்றத்தில் கவிஞர் யோ. புரட்சியின் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயக்காந், சிறப்பு விருந்தினராக கராத்தே, யோகா ஆசிரியர் ஜெயம் ஜெகன் ஆகியோர் கலந்து கொள்வர். (9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதி, மணிக்கூட்டு கோபுர வீதி, பஸார் வீதி, ஞானம்ஸ் விடுதி, லதுசியந் விடுதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், கமலேஸ்வரி, சிவராதா புடைவையகம், ரொப் பாஸ், அன்னை நாகா பூட்சிற்றி, LOLC, யாழ்.போதனா வைத்தியசாலை அதி அவசர பிரிவு, ஆஸ்பத்திரி வீதியில் கஸ்தூரியார் வீதி சந்தியிலிருந்து காரைநகர் வீதி சந்தி வரை, கே.கே.எஸ். வீதி சத்திர சந்தியிலிருந்து துரையப்பா விளையாட்டரங்கு வரை, யாழ்ப்பாணம் 1ம், 2ம, 3ம், 4ம் குறுக்கு தெருக் கள், வடமாகாண ஊழியர்திணைக்களம், தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, ஸ்ரீலங்கா ரெலிக்கொம், யாழ். பொது நூலகம், யாழ்பொலிஸ்நிலையம், யாழ் நீதிமன்றக் கட்டடத்தொகுதி, STS வைத்திய சாலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வவுனியா நகரத்திலிருந்து (கண்டி வீதி) பூ ஓயா வரை, மதவு வைத்த குளத்திலிருந்து பண்டாரிக்கும் வரை, Gowloom Garments, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், SLBC ஈரப்பெரியகுளம் யோசப் படை முகாம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், Air Point Joint Service Army Camp, பூ ஓயா இராணுவ முகாம், Recbo North ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**நீ உன்னுடைய வேலையை இறைவனுக்கு நைவேத்தியமாக அர்ப்பணித்து விட்டால் தியானம் என்பதே தேவையில்லை. உன் பணியில் நீ செலுத்தும் கவனம் தியானத்தை விட உயர்ந்தது.**

**-ஸ்ரீஅன்னை**

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### முக்தி நிலையை அடைய



நமது பூமியை விட சூட்சுமமான உலகங்கள் இருக்கலாம். அங்கே இன்ப அனுபவங்கள் இன்னும் நுட்பமாக இருக்க லாம். ஆனால் அந்த உலகங்களும் பிரபஞ்சத்திற்குள்தான் இருக்க வேண் டும். எனவே அவையும் நியதிக்குள் கட்டுப்பட்டவையே.

நாம் இவைகளுக்கு அப்பால் போகவேண்டும். இந்தச் சிறிய பிரபஞ்சம் முடிகின்ற இடத்தில் தான் உண்மையான உணர்வு தொடங்குகிறது. இந்தச் சிறு சிறு இன்பங்களும் துன்பங்களும் பொருட்களும் பற்றிய அறிவும் அங்கே முற்றுப் பெறுகிறது, உண்மை தொடங்குகிறது.

வாழ்வின் மீதுள்ள மோகத்தை விடும்வரை கட்டுப்பட்ட இந்த நிலையற்ற நிலைமையின்மீது வைத்துள்ள தீவிரமான பற்றை விடும் வரை அப்பால் இருக்கின்ற எல்லையற்ற முக்தி நிலையின் ஒரு கண்காட்சியைக் கூடப் பெறுவோம் என்ற நம்பிக்கை கிடையாது. மனித சமுதாயத்தின் மகோன்னதமான எல்லா முயற்சிகளையுமுடைய லட்சியமான அந்த முக்தி நிலையைப் பெறுவதற்கு ஒரே வழிதான் உள்ளது. இந்தச் சிறிய வாழ்வை விடவேண்டும். இந்தச் சிறிய பிரபஞ்சத்தை விடவேண்டும்.

இந்தப் பூமியை விடவேண்டும், சொர்க்கத்தை விடவேண்டும், உடம்பை விடவேண்டும், மனதை விடவேண்டும், எல்லைக்குட்பட்ட, கட்டுப்பட்ட அனைத்தையும் விடவேண்டும். இதுதான் வழி, இது அறிவு பூர்வமானதுதான். புலன்களாலும் மனதாலும் உணரப்படுகின்ற இந்தச் சிறிய பிரபஞ்சத்தின் மீது நமக்குள்ள பற்றை விட்டோமானால் அந்தக் கணமே நாம் முக்தி பெறுவோம்.

# மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றன கொற்றாவத்தை றேஞ்சர்ஸ், மனோகரா அணிகள்









வல்வை விளையாட்டுக்கழகம் தனது 60 ஆம் ஆண்டு வைர விழாவினை முன்னிட்டு மறைந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக வடமாகாண ரீதியில் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டத் தொடரானது வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

தொடரில் முதல் நான்கு பரிசில்களும் 7,00,000.00 ரூபாய் (ஏழு இலட்சம்) பெறுமதியானது. இது வடமாகாணத்தில் முதல் தடவையாக வழங்கப்படும் மாபெரும் பரிசில் தொகையாகும். அந்த வகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முதலாவது ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது. விறுவிறுப்பிற்கு பஞ்ச மில்லாத இவ்வாட்டமானது ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறாமல் சமநிலையடைந்தது.

எனவே வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி 05:04 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று 3 ஆம் சுற்றுக்கு தெரிவாகியது.

. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா அணியினை எதிர்த்து அல்வாய் மனோகரா அணியானது மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் 01:00 என்ற கோல்கணக்கில் மனோகரா அணியானது வெற்றி பெற்று 3 ஆம் சுற்றுக்குள் நுழைந்தது. (ஜ-2-60)

## கரப்பந்தாட்ட சங்க பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படவுள்ளது. எனவே அனைத்துக் கழகங்களும் தங்கள் கழகப் பிரதிநிதிகளை தவறாது உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## மகிதரன் வெற்றிக்கிண்ணம்

## சென்.நீக்கிலஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி



இ.மகிதரன் ஆதரவில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் பதினொரு பேர் கொண்ட ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸை எதிர்த்து நவக்கிரி எல்லாளன் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 10:00 என்ற கோல் கணக்கில் சென். நீக்கிலஸ் அணி அபார வெற்றியைப் பதிவு செய்தது. இதன் மூலம் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. (ஜ-2)

## கொரோனா அச்சத்துக்கு மத்தியில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது



கொரோனா அச்சத்துக்கு மத்தியில் உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டியின் தீபம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில்.ஏற்றப்பட்டது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜூலை 24 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.


கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் இந்தப் போட்டி நடக்குமா அல்லது தள்ளிவைக்கப்படுமா? என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் ஒலிம்பிக் தீபம் ஏற்றும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஒலிம்பிக் பிறந்த இடமான கிரீஸ் நாட்டின் ஒலிம்பியாவில் நேற்று பாரம்பரிய முறைப்படி கிறீஸ் நடிகை ஸாந்தி ஜியார்ஜிவ் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றினார். கொரோனா பீதி காரணமாக இந்த நிகழ்ச்சியை காண பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

ஒலிம்பிக் ஜோதி அடுத்த 7 நாட்கள் கிறீஸ் நாட்டில் தொடர் ஓட்டமாக எடுத்துச் செல்லப்படும். முதல் நபராக கிரீஸ் துப்பாக்கி சுடுதல் வீராங்கனை அன்ன கோராககி தீபத்தை ஏந்தி வந்தார்.

அது எதிர்வரும் 19 ஆம் திகதி டோக்கியோ போட்டி அமைப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படும். (ஜ-2)

## கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஐ.பி.எல்.ரி-20 கிரிக்கெட் தொடர் ஒத்திவைப்பு





கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நடப்பு ஆண்டு ஐ.பி. எல். ரி-20 கிரிக்கெட் தொடர், ஒத்தி வைக்கப்பட்டது.

இதற்கமைய ஐ.பி.எல். ரி-20 கிரிக்கெட் தொடரின் 13 ஆவது அத்தியாயம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், ஐ.பி.எல். தொடரைக்காண மைதானங்களில் ஆயிரக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் கூடுவார்கள் என்பதால் மராட்டியம், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்கள் ஏற்கனவே எதிர்ப்பை பதிவு செய்தன.

அத்தோடு, வெளிநாட்டு சுற்றுலா விசாவுக்கு மத்திய அரசு ஏப்ரல் 15 ஆம் திகதி வரை தடைவிதித்துள்ளதனால் வெளிநாட்டு வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பது சந்தேகம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நடப்பு ஆண்டு ஐ.பி. எல். ரி-20 கிரிக்கெட் தொடர், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் சவுரவ் கங்குலி மற்றும் செயலாளர் ஜெய் ஷா மற்றும் ஐ.பி. எல். இன் உயர் நிர்வாகம் ஆகியோர் இணைந்து நடத்திய ஆலோசனை கூட்டத்தின் பின்னர் இந்த முடிவினை உத்தியோகபூர்வமாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது. (ஜ-2)

## வெளிநாடு...

தடை விதிப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நாடு முழுவதும் பரவும் அச்சம் காணப்படுவதனாலேயே மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நாட்டில் எவ்வித...

இல்லை என அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது காணப்படும் பதற்ற நிலை காரணமாக எரிபொருள் மற்றும் உணவுக்கு பற்றாக்குறை ஏற்படும் என சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

ஆனால் உணவுக்கோ, எரிபொருளுக்கோ எவ்வித பற்றாக்குறையும் இல்லை என அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## கொரோனா...

யுள்ளதாக தற்போது தேசிய தொற்று நோயியல் நிறுவகத்தில் சிச்சை பெற்றுவரும் இலங்கையர்களுடன் தொடர்புகளுக்கு இணங்க 13 பேரும் அதில் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இத்தாலி தென்கொரியா, ஈரானில் இருந்து நாட்டை வந்தடைந்த மேலும் 315 இலங்கையர்கள் நேற்று தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## சந்தேகத்தில் ஒரு...

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உடனடியாக கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளாரா என்ற பரிசோதனைக்காகவும் மேலதிக சிகிச்சைக்காகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட நபர் 34 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது. மருத்துவ பரிசோதனைக்கு பின்னரே கொரோனா தொற்று உள்ளதா, என்பதை உறுதிப்படுத்த முடியும் என வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-3,9,10,250,299)

## முன்பள்ளிகளை...

ளது.

இந்த நிலையில் முன்பள்ளிகளையும் மறு அறிவித்தல்வரை மூடுமாறு பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (ம-3)

## இலங்கையில்...

ஜேர்மன் நாட்டில் இருந்து இலங்கை வந்தவர் என அடையாளம் காணப்பட்ட நிலையில், அவர் அங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய இருவரும் 37 மற்றும் 43 வயதுடையவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. இவர்கள் இத்தாலியில் இருந்து நாடு திரும்பிய நிலையில் கந்தன்காடு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் பொலநறுவை வைத்தியசாலையிலும் மற்றையவர் அங்கொடை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே இரண்டு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வரும் நிலையில், தற்போது இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது. (ம-3)

## குற்றஞ்சாட்டப்...

காவலில் இருந்து தப்பித்துள்ளார்.

அரியாலை மாம்பழம் சந்தியைச் சேர்ந்த விக்டர் சுந்தர் (வயது-46) என்ற சந்தேக நபரே நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சிகிச்சைப் பிரிவிலிருந்து தப்பித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினரால் கடந்த புதன்கிழமை முற்பகல் கைது செய்யப்பட்ட அவர், அன்றைய தினம் மாலை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் இணைப்பாளரால் பொலிஸ் நிலைய தடுப்பிலிருந்து அடிகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நபர் ஒருவரைத் தாக்கியமை மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் காவலில் அவர் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் விக்டர் சுந்தர் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் காவலிலிருந்து தப்பித்துள்ளார் என்று யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

சந்தேகநபரை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் பொலிஸாரால் டின்னர் பருக்கி சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குறித்த சந்தேகநபரை, சட்டவைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டுள்ள நிலையில் இவ்வாறு தப்பித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,9,10)

## ஊழியர் ஒருவர்...

பிட்டிப் பகுதியிலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த 42 வயதுடைய வில்வராஜன் குருபவராசா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## முதியவரை...

பெற்றுள்ளது.

இதில் கொழும்புத்துறையில் வசிக்கும் அல்லைப்பிட்டி 02ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யோசப் அருமைநாயகம் என்பவரே தாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த முதியவர் நேற்று முன்தினம் காலை கொழும்புத்துறையிலிருந்து அல்லைப்பிட்டிக்கு வந்து விறகு எடுத்துக் கொண்டு மீண்டும் மதியம் கொழும்புத்துறை நோக்கிச் சென்ற நிலையிலேயே காணாமல் போயிருந்தார்.

அவரின் உறவினர்கள் நேற்று முன்தினம் இரவு வரை தேடியபோதும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் செல்வா திரையரங்குப் பகுதியில் உள்ள சிறிய ஒழுங்கை ஒன்றில் அடிகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட முதியவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-3)

## கொரோனா பரி...

பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் 5 பேருந்துகளில் கொரோனா தொற்று ஆய்வுக்குட்படுத்தும் நடவடிக்கைக்கு 265 பேர் வவுனியா, பம்பமடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தொற்று நோய் ஆய்வு நிலையத்திற்கு இராணுவத்தால் அழைத்து வரப்பட்டனர்.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த குறித்த நபர்களை பம்மைடு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 14 நாட்களுக்கு சிகிச்சை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, தென் கொரியாவிலிருந்து இலங்கைக்கு வந்த 166 பேர் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,9,10,250,299)

## கட்டுநாயக்கவில்...

விமான நிலையத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் லயன் எயார் என்ற விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இதையடுத்து, குறித்த விமானத்தில் இருந்து இருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டதுடன் இருவர் கடும் உடல் நலக் குறைவால் அவதிப்பட்ட நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தாக்கம் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர்கள் இருவரும் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். மேலும், உயிரிழந்த இருவரினதும் உடற்கூறுகள் பரிசோதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவின் கிங் அப்துல்லா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து குறித்த விமானம் இந்தோனேஷியாவின் சுரபயா விமான நிலையத்திற்கு பயணம் செய்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் விமானம் தரையிறக்கப்பட்டு உயிரிழந்த இரண்டு உடல்களையும் மற்றும் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட இருவரையும் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்த பின்னர் விமானம் மீண்டும் இந்தோனேஷியாவுக்கான பயணத்தை ஆரம்பித்தது. (ம-3)

## இந்தியாவில்...

தாக்குதலுக்கு இந்தியாவில் பலியானோர் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்தது.

சீனாவின் கொரோனா வைரஸ் தற்போது உலகின் 120க்கும் அதிகமான நாடுகளுக்கு பரவியுள்ளது.

இந்த வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். மேலும், 1 லட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் பரவியுள்ளது.

இந்தியாவிலும் 81 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

மெகா பவர்
திகதி 2020/03/13
சீட்டிழுப்பு இலக்கம் 510
Y 12 06 29 33 54

மஹஜன சம்பத
திகதி 2020/03/13
சீட்டிழுப்பு இலக்கம் 4134
J 2 2 6 0 5 8

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 13-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2420
P 09 22 24 76

தன நிதானய
திகதி - 2020.03.13
சீட்டிழுப்பு இலக்கம் - 277
Z 09 13 57 82

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 911
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.03.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,104,255/-
02 04 39 48 H

சம்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 331
சீட்டிழுப்பு திகதி 13.03.2020 சிவப்பு
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 09 10 32
விதி எண் 7
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.53,444,804
2020/03/18 ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

ஜய
571 பச்சை 13.03 2020 வெள்ளி
K 21 42 45 80
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,555,785
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 13.03.2020 வெற்றி வாரம் 2797 வர்ணம் கருநீலம்
வெற்றி இலக்கங்கள் கடகம் 29 32 34 35
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,318,078
ரூ.500 பரிசுக்குரிய 8 2 2 6
ரூ.100 பரிசுக்குரிய 9 9 9
டபுள் சான்ஸ் விசேட இல.
2020.03.14 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்

# வீட்டில் இருந்தபடி கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்

## யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் மாணவர்களுக்கு அறிவுரை



(யாழ்ப்பாணம்)

நாட்டில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட நீண்ட விடுமுறை காலத்தில், மாணவர்கள் வீட்டிலிருந்தபடி தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கேட்டுள்ளார்.

பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்கள் தமக்குக் கிடைத்த விடுமுறையை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும்.

இக் காலத்தில் வீட்டிலிருந்தபடி கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதுடன் நல்ல நூல்களை வாசிப்பதிலும் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளிலும் மாணவர்கள் ஈடுபடுவதானது விடுமுறைக்காலத்தை உச்ச பயன்பாடுடையதாக ஆக்க முடியும்.

இதற்கு மேலாக, சுயமாகக் கற்றலில் ஈடுபடுவதானது ஆழ்ந்த அறிவுப் புலத்திற்கு அடிப்படையாக அமையும்.

எனவே விடுமுறைக்காலத்தில் தொலைக்காட்சிகளின் ஆக்கிரமிப்புக்குள்ளும் கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்குள்ளும் அகப்படாமல் மாணவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமானது.

இது விடயத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் அன்பாகவும் நட்பாகவும் பழகி, அவர்களுக்கு நல்லவழிகாட்டிகளாக செயற்படவேண்டும் எனவும் யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா கேட்டுள்ளார். (ம)


## பதவி வெற்றிடம்

AIA நெல்லியடி கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன

1. அலுவலக உத்தியோகத்தர் (நிரந்தரம்)
   தகைமை
   - A/L சித்தியடைந்திருக்க வேண்டும்.
   - சிங்களம் அல்லது ஆங்கிலம் பேசக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
2. வெளிக்கள முகாமையாளர்
   தகைமை
   - காப்புறுதி துறையில் குறைந்தது 1வருட முன் அனுபவம்
   - வெளிக்கள முகாமையாளருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(C-9480)

தொடர்புகளுக்கு : T.P : 076 879 2992

## பணியாளர் தேவை

வட்டுக்கோட்டையில் இயங்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு முழு நேரம் பணியாற்றக் கூடிய பெண் மேற்பார்வையாளர் தேவை.

வயது - 25 முதல் 55

க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.

முன் அனுபவம், கணனி அறிவு விரும்பத்தக்கது.

(2594)

தொடர்பு - பணியாளர்,
வள்ளுவர் சிறுவர் அபிவிருத்தி நிலையம்,
வட்டுக்கோட்டை. 077 525 9513

## கட்டுமானப் பொருட்கள் விநியோகம்

1. மணல் வகை - கட்டுமணல், பூச்சு மணல் (கண்டாவளை பெருக்கன், நைஸ்)
2. சல்லி வகை - கருங்கல் சல்லி, வெள்ளை சல்லி
3. கண்டல் வகை - 9"x6" கருங்கல், 9 6 வெள்ளைக்கல் (காட்டுக்கல்)
4. டஸ்ட் - கருங்கல் டஸ்ட் , வெள்ளைக்கல் டஸ்ட், கொங்கிறீற் கற்கள் வகைகள், பூக்கல், தளம் மற்றும் நிலப்பதிவுகல், கொங்கிறீற் வேலி, தூண் வகைகள் ஆகியவை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். (2333)

தொடர்புகளுக்கு:- 0773713000/0760964460

## FALC FRENCH LANGUAGE CENTRE

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட

பிரெஞ்ச் Courses

V. Jegan(Trained in France)

(2599)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 14.03.20 சனி 8 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி
0779 789 456
ஆரம்பம் :16.03.20 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.


## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 14 |
| 11 | 02 |
| 1930 | 2020 |



அமரர்

### சின்னத்துரை கார்த்திகேசு
### (மெக்கானிக் குட்டி அண்ணா)

கடந்த 14.02.2020 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னத்துரை கார்த்திகேசு (மெக்கானிக் குட்டி அண்ணா) அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.03.2020) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் 15.03.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆதமசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வருகை தந்து ஆறுதல் தெரிவித்தோர், சகல வழிகளிலும் உதவி புரிந்தோர், இறுதிச் சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், தொலைபேசி, முகநூல் வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு : தயவுகூர்ந்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வில்வளை, கலட்டி,
தும்பளை, பருத்தித்துறை,
T.P : 077 664 7836, 077 967 2607

(C-9482)

தகவல் : குடும்பத்தினர்
முரளிதரன், மதி


## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=

கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9459)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 / 021 567 1532

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

## பொதிகள் சேவை

வெளிநாடுகளுக்கான பொதிகள் 3 நாட்களில் அனுப்பிக்கொள்ளலாம்

UK - 540/=
Germany - 640/=
France - 650/=

Lanka Cargo Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
076 485 4092 (2564)

## J.THARSHAN'S ENGLISH ACADEMY

30 வகுப்புகளில் சரளமாக ஆங்கிலம் எழுத, வாசிக்க, கதைக்க 16 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.
ஆங்கிலம் கதைப்பதற்கு 100% முழு உத்தரவாதம் (2519)

தொடர்புகளுக்கு:- 077 478 7007

## அறை வாடகைக்கு

படிக்கும் மாணவிகள், பெண் உத்தியோகத்தர்களுக்கு நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பான சூழலில் அறை வாடகைக்கு உண்டு. தேவைப்படின் சாப்பாடு வசதியும் செய்து கொடுக்கப்படும். (2551)

தொடர்புகளுக்கு: 0772735406

## Personal Group Class

இரசாயனவியல் (A/L) 2020, 2021, 2022, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும்.

சி.அங்கதன்
B.Sc (Chem.Spl)

(2590)

தொடர்பு : 075 436 4510

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/= Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-9458)

0768226240

V2 TRAVELS

## English

Diploma / Spoken Eng

British college of higher studies

0212224550 / 0761380212
Sirampiyady lane,
Stanley road, Jaffna (C-9409)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்
# மேல்மாகாண பிரபல பாடசாலை

நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடம் வினாப்பத்திரம்- 02

01. பின்வரும் பாடல் அடிகளை வாசிக்க

இடர் வரும் போதும் – உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல்–மாந்தர்
உறவு கொள்வர் அப்பா

ஓடும் உதிரத்தில் – வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் – சாதி
தெரிவ துண்டோ அப்பா?

நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்.

தேசிக விநாயகம்பிள்ளை

மேலுள்ள பாடல் அடிகளைப் பயன்படுத்தி (1) தொடக்கம் (6) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) உடன் பிறந்தவர்கள்போல் மாந்தர் எப்போது உறவு கொள்வர்?

.................................................................................................

(2) மேற்குலகத்தார் என கவிஞர் யாரைக் குறிப்பிடுகிறார்?

.................................................................................................

(3) உயர்திணைப் படர்க்கை ஒருமைப் பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

.................................................................................................

(4) 'துயர்' என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லை பாடலில் இருந்து எழுதுக.

.................................................................................................

(5) 'உதிரம்'என்ற சொல்லின் ஒத்த சொல்லை எழுதுக.

.................................................................................................

(6) உடன் பிறந்தவர்களைக் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக.

.................................................................................................

2. (அ) சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக.

(1) இளனீர் இளநீர் இளனீ இளனி

(2) பன்னிரெண்டு பன்ரெண்டு பன்னிரண்டு பண்ரண்டு

(ஆ) பின்வரும் சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

(1) வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன்

.................................................................................................

(2) அரசன், ஆசிரியர், தந்தை, தாய், தமையன் ஆகியோர்

.................................................................................................

(3) ஒருவர் முழுப்பொருளையும் தனித்து அனுபவித்தல்

.................................................................................................

3. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

(1) அள்ளிக்குவித்தல்

.................................................................

(2) நட்டாற்றில் விடல்

.................................................................

4. பொருத்தமான மரபுச் சொல்லை எழுதுக.

(1) மாவின் உள்ளீடு சதைபோல தோடையின் உள்ளீடு

.................................................................................................

(2) ஆட்டிற்கு இடையன் எனின் யானைக்கு

.................................................................................................

(3) மாட்டின் மலம் சாணம் என்பது போல யானையின் மலம்

.................................................................................................

5. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான இணைமொழிகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

பேரும் புகழும், அல்லும் பகலும், தடல்புடலாக, ஆடிப்பாடி

(1) திருமண ஏற்பாடுகள்........................................... நடைபெற்றன.

(2) அவரது ........................................... உலகெங்கும் பரவியது.

6.கீழே உள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

(1)Let's sing a song ..............................................

(2) I am going out ..............................................


(3) What's your favourite colour? ..............................................

7. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்துக்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

நான் சுகம் நன்றி ..............................................

8. படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலப் பெயரை எழுதுக.

(1)  ..............................................

(2)  ..............................................

9. (அ) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.

சுகம் எப்படி? ..............................................

(ஆ) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

எளியட்ட யன்ன ..............................................

● 10 தொடக்கம் 39 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

10. பின்வரும் மரங்களுள் ஆணி வேரைக் கொண்டிராத ஒரு மரம் எது?

(1) தென்னை (2) புளி (3) பலா (4)றம்புட்டான்

11. தாவரங்களில் கூடு அமைத்து வாழும் முலையூட்டி விலங்கு

(1)வௌவால் (2) அணில் (3) எலி (4)கீரி

12.திருக்கொன்றைப் பூவின் நிறம்

(1) சிவப்பு (2) ஊதா (3) மஞ்சள் (4)வெள்ளை

13.ஒன்றுக்கொன்று அளவில் வித்தியாசமான இதழ்களைக் கொண்ட மலர்

(1)அகத்தி (2) அந்தூரியம் (3) மல்லிகை (4)வெட்சி

14. நியூசிலாந்து நாட்டில் மட்டும் காணப்படும் பறவை

(1) தீக்கோழி (2) வான்கோழி (3)கிவி (4)பென்குயின்

15. இலங்கையின் தேசிய இலச்சினையில் தன்னிறைவு என்பதனை உணர்த்தும் பகுதி

(1) தர்மசக்கரம் (2) பூவிதழ் (3) நெற்கதிர் (4) சூரியன்

16. உடலுக்குச் சக்தியைச் கொடுப்பதில் அதிகளவில் பங்களிப்புச் செய்யும் உணவுகள் யாது?

(1) சோறு, பாண், இடியப்பம்
(2) ஈரப்பலாக்காய், பருப்பு, குரக்கன் பிட்டு
(3) பசளி, மாம்பழம், வெண்டி
(4) பலாக்காய், சோறு, பயறு

17. உப்பு விரைவாகக் கரையக் கூடிய தன்மையுள்ள நீர்

(1) வெந்நீர் (2) மிதமான சூடு உள்ள நீர்
(3) குளிர்ந்த நீர் (4) மிதமான குளிர்

18. இலங்கையின் மிகப் பெரிய தாவரவியற் பூங்கா அமைந்துள்ள இடம்.

(1) கொழும்பு (2) ஹக்கல (3) பேராதனை (4) நுவரெலியா

19. வித்துக்களை நீக்கிய பின்னர் உணவுக்குப் பயன்படுத்தும் காய்கள் யாவை?

(1) பூசணிக்காய், வெண்டிக்காய், பாகல், பயற்றை
(2) வட்டுக்கத்தரி, வெள்ளரிக்காய், பப்பாசி, பூசணிக்காய்
(3) கத்தரிக்காய், வெண்டிக்காய், சிறகவரை, போஞ்சி
(4) புடோல், பாகல், பயிற்றை, சிறகவரை

20.நெற் பயிரின் சாற்றை உறிஞ்சி சேதம் ஏற்படுத்துவது.

(1) பழ ஈ (2) கருவண்டு (3) நத்தை (4) கபில நிறத் தத்தி


21. 

உருவில் உள்ள மைதான நிகழ்ச்சி யாது?

(1) குண்டு போடுதல் (2) தட்டெறிதல்
(3)ஈட்டி எறிதல் (4)கோலூன்றிப் பாய்தல்

22. நாற்று மேடையிலிருந்து பெறப்பட்டு நடப்படும் பயிர்கள்.

(1) கறிமிளகாய், கத்தரி, மிளகாய் (2) போஞ்சி, கோவா, கரட்
(3) தக்காளி, கறிமிளகாய், பீர்க்கு (4) முள்ளங்கி, கடுகு, பூசணி


23. 

உருவில் உள்ள பாதம் எப்பிராணிக்குரியது?

(1) குதிரைக்கு (2) மானுக்கு
(3)மாட்டுக்கு (4) ஆட்டிற்கு

24.சட்டக் காந்தங்கள் இரண்டின் ஒவ்வாத முனைகளை அருகருகே கொண்டு செல்லும்போது நடைபெறக்கூடியது யாது?
(1) விலகும் (2) கவரும் (3)தள்ளும் (4)உருகும்

25. பின்வரும் ஒழுங்கமைப்பில் இரும்பாணியை நோக்கிக் குண்டுசி கூடுதலாக இழுக்கப்படும்



26. கிராமசேவையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியாத ஓர் சேவை?
(1) நன்னடத்தைச் சான்றிதழ் பெறல்
(2) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் பெறல்
(3) அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல்
(4) கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்தல்

27. ஆனைக்கால் நோய் பரவுவது
(1) நுளம்புகள் மூலம் (2) யானைகள் மூலம்
(3) வீட்டு ஈயின் மூலம் (4)நீரின்மூலம்

28.


உருவில் உள்ள குறியீடு உணர்த்துவது எதனை?
(1) பொருட்கள் விற்பனை நிலையம்
(2) சிற்றுண்டிச்சாலை
(3) சிகை அலங்கார நிலையம்
(4) வீட்டுத் தளபாடங்கள்

29.

நீல நிறப்பலகையில் வெள்ளை நிற முக்கோணியினுள்ள இவ்வீதிக் குறியீடு வெளிப்படுத்துவது யாது?
(1) மெதுவாகப் பாதையைக் கடக்கவும்
(2) சிறுவர்கள் கடக்கும் இடம் முன்னாள்
(3) சிறுவர்கள் பாதையைக் கடக்க வேண்டாம்
(4) சிறுவர்கள் கடக்கும் இடம்

30. இலங்கையில் உள்ள மிகப்பெரிய இயற்கைக் காடு.
(1) அமேசன் காடுகள் (2) படகமுவ வனம்
(3) சிங்கராஜ வனம் (4) முத்துராஜவள வனம்

31. உருக்களில் வேங்கை மரத்தை காட்டும் உருயாது?



32. ஈர மணலில் புதைத்து வைப்பதன் மூலம் பாதுகாக்கக் கூடிய உணவாக அமையாதது.
(1) பலாக்கொட்டை (2) தோடம்பழம்
(3) எலுமிச்சம் பழம் (4) இஞ்சிக் கிழங்கு

33.அம்பாந்தோட்டை பிரதேசக் கடலில் கலக்கும் நதி
(1) ஜின்கங்கை (2) வளவகங்கை
(3)நில்வளகங்கை (4) மாணிக்க கங்கை

34. உலக தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது
(1)ஒக்டோபர்-1 (2) ஒக்டோபர்-6 (3) மே-1 (4) மே - 15

35. பின்வரும் ஊடகங்களுள் அச்சு ஊடகம் அல்லாதது?
(1) நூல்கள் (2)பத்திரிகை (3)அரங்கு (4)சுவரொட்டி





36. உறக்கத்திலிருந்து எழுந்தவுடன் தினமும் முதலில் செய்ய வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று.
(1) காலை உணவு உண்டு குளித்தல்
(2) முகம் கழுவி பல் துலக்குதல்
(3) பல்துலக்கி முகம் கழுவுதல்
(4) தலையணை, படுக்கை, விரிப்பு என்பவற்றை உரிய இடத்தில் வைத்தல்

37. சிவப்பு ,மஞ்சள் ஆகிய நிறங்களைச் சமமாகக் கலப்பதன் மூலம் கிடைக்கும் நிறம்
(1) இளம்சிவப்பு (2)கடும்பச்சை (3)பச்சை (4)செம்மஞ்சள்

38.பின்வரும் நிறங்களுள் முதன்மை வர்ணம் அல்லாதது.
(1) நீலம் (2) மஞ்சள் (3) பச்சை (4)சிவப்பு

39.இசைக்கருவிகளின் பெயர்களைத் தெரிவு செய்து அவை குறிக்கும் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1. கைத்தாளம் 2. கஞ்சிரா 3. மத்தளம் 4. புல்லாங்குழல்

1)  2)  3)  4) 

.................... .................... .................... ....................

● சரியான தகவலுக்கு எதிரே "சரி" எனவும் பிழையான தகவலுக்கு எதிரே "பிழை" எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

40. தேசியக்கொடியை காலையில் சூரியன் உதித்த பின் ஏற்றி மாலையில் சூரியன் மறைவதற்கு முன் இறக்க வேண்டும். (............)

41. பழுதடைந்த கிழிந்த தேசியக்கொடியை சூரியஒளி படும் இடங்களில் ஏற்ற வேண்டும். (............)

42. 1. தேசியக்கொடி ஏற்றும் போது இலகுவாய் நிற்றல் வேண்டும். (............)

2.தேசிய பிரமுகர்களுக்கு முன் தேசிய கொடியை தாழ்த்திப் பிடிக்கக்கூடாது. (............)

43.ஊர்வலங்களின் போது தேசியக்கொடி நிலத்தில் படாதவண்ணம் தூக்கிச்செல்ல வேண்டும். (............)

44.(1)தேசியக்கொடி தூக்கிச் செல்பவர் அக்கூட்டத்திலுள்ளவர்களில் மிகவும் வயது கூடிய முதியவராக இருக்க வேண்டும். (............)

(2)தேசியக் கொடிக்கு மதிப்பளிப்பது இந்நாட்டு சகல மக்களினதும் கடமை ஆகும். (............)

● தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.

45. 90099 தரப்பட்ட எண்ணை எழுத்தில் எழுதுக.

..............................................................................................................

46. அடுத்துவரும் இரு எண்களை எழுதுக
8900 8920 8940 8960 .............. ................

47. நூறாயிரம் என்பதை இலக்கங்களில் எழுதுக.

..............................................................................................................

48. எட்டுப்பேர் 4 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை இருவர் எத்தனை நாட்களில் செய்வார்கள்? ........................................

49. காலை 8.00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த ஒருவர் அன்றையதினம் மாலை 3.00 மணிக்கு பயணத்தை முடித்துக் கொண்டார். அவர் பயணத்தில் செலவிட்ட மணித்தியாலங்கள் எத்தனை? ..................................

50. ரூபாய் 286.45 ஐக் குறியீடுகளில் துநுஊ.டுமு எனக் காட்டலாமாயின் ரூபா 685.45 ஐ எவ்வாறு குறியீடுகள் மூலம் காட்டலாம்? ....................................


51. பருப்பு மூடையொன்றின் நிறை 26kg 300g ஆகும்.9kg 500g பருப்பு விற்கப்பட்டதன் பின் மூடையில் எஞ்சியிருக்கும் பருப்பின் நிறை யாது?
(.......kg.......g)


52. 2kg 500g சீனியின் விலை ரூபா 245.00 ஆகும்.1kg 250g சீனியின் விலை எவ்வளவு? (.........ரூபாய்.......சதம்)

53. 4லீற்றர் 500மில்லிலீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை ரூபா 855.00 ஆகும். 2லீற்றர் 500மில்லிலீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை எவ்வளவு?(ரூ. ................)

54

கடிகாரமுகம் பிற்பகல் நேரத்தைக் காட்டுகிறது. இந்நேரத்தைக் கீழே தரப்பட்டுள்ள 24 மணிநேர கடிகாரத்தில் குறித்துக் காட்டுக?



55.


உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?...........m

56. சில நகரங்களுக்கிடையேயான தூரங்கள் கிலோ மீற்றரில் தரப்பட்டுள்ளது.

| | | | அனுராதபுரம் |
|---|---|---|---|
| | | புத்தளம் | 74 |
| | சிலாபம் | 66 | 140 |
| கொழும்பு | 72 | 138 | ............. |

கொழும்பிலிருந்து சிலாபம் புத்தளம் ஊடாக அனுராதபுரத்திற்குள்ள தூரம் யாது?..........km

● அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமானதை தெரிந்து எழுதுக.

நான், நீ, கிளி, அவன், நீங்கள்

57. முன்னிலைப் பன்மைப் பெயர்ச்சொல் ..............

58. படர்க்கை ஒருமை அஃறிணை பெயர்ச்சொல்.............. .

59. தன்மை ஒருமைப் பெயர்ச்சொல்...............

● "மின்சாரத்தைச் சிக்கனமாக பயன்படுத்துவோம்"

60. என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)

(1).............................................................................................................
.............................................................................................................
(2).............................................................................................................
.............................................................................................................
(3).............................................................................................................
.............................................................................................................